# அலியான்ஸ்

## எச்.எஸ்.பீ. சீ பிரிமியர் கார்ட்

**மற்றும்**

**வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர் கார்ட் உரிமையாளர்களுக்குரிய**

**பயணக் காப்புறுதி**

**உலகின் எப்பாகத்திலிருந்தும் உதவிக்கு அழைக்கவும்**

**அலியான்ஸ் குளோபல் அசிஸ்டன்ஸ்**

**மேலதிக தகவல்களுக்குத் தொடர்பு கொள்க**

**அலியான்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட்**

**இல:** 675, **டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்த**

**கொழும்பு** -09, **இலங்கை**

**தொ.பே:** +94 11 2303 300

**வலைத்தளம்:** WWW.allianz.lk **ஈ மெயில் :**info@allianz.lk

**புதுப்பித்தல் அட்டவணை**

**காப்புறுதிக்கொள்கை உரிமையாளர்** **:** ஹாங்காங் & சங்காய் பாங்கிங் கோபரேசன்

**காப்புறுதிக்கொள்கை இலக்கம்** **: TPS/**449520

**காப்புறுதி செய்யப்பட்டவர்** **: கடனட்டை உரிமையாளர்**
பிரிமியர் கடன் அட்டை மற்றும் எச்.எஸ்.பீ.சி(இலங்கை) யினால் வழங்கப்பட்ட வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர் கடன் அட்டை உரிமையாளர்கள்

**காலம்** **:** 31.12.2021 – 31.12.2022

**புவியியல் பரப்பு** **:** இலங்கை தவிர்ந்த உலகம் முழுவதும்

**காப்புறுதிப்பத்திர படிவம்** : அலியான்ஸ் இன்சுரன்சின் வார்த்தைப்

**காப்புறுதிக்கான தகமை**

:இரு வழிப் பயணத்துக்கான விமானச்சீட்டுக் கட்டணம் பயணியின் பிரிமியர் அட்டை அல்லது வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர் அட்டை ஊடாக செலுத்தப்பட்டிருக்க வேண்டும்

அல்லது

பயணத்துக்கு முந்திய மாதத்தில் அல்லது பயணம் செய்யும் மாதத்தில் ஒரு லட்சம் ( ரூபா 100,000/=) இலங்கை ரூபாய்கள் மீள் நிரப்பு செய்யப்பட்டிருப்பின் பிரிமியர் கடன் அட்டை மற்றும் வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர் கடனட்டை உரிமையாளர்கள் காப்புறுதிக்குத் தகுதி பெறுவர்.

பயணிகளின் அதிகூடிய வயது அவரது அடுத்த பிறந்த நாளன்று (கடனட்டை உரிமையாளர் மற்றும் அவரது உடனடிக்குடும்ப அங்கத்தவர்கள்) 75 க்கு மேற்படக்கூடாது.

அட்டை உரிமையாளர் தனது உடனடிக்குடும்ப அங்கத்தவர்

உடனடிக்குடும்ப அங்கத்தவர் என்பது காப்புறுதி செய்யப்பட்டவரின் சட்டபூர்வ மனைவி, திருமணமாகாத பிள்ளைகள் (18 வயதுக்குட்பட்ட அல்லது முழுமையான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் பெற்றோரின் பூரண பராமரிப்பில்

வெளியேறிச் சென்றதில் இருந்து தொடர்ச்சியான 90 நாட்கள் வரை.

**ஒரு பயனுத்துக்கான அதி கூடிய காலம்**

வெளிச்செல்லும் நாள் காப்புறுதி செல்லுபடியாகும் காலப் பகுதிக்குட்படவேண்டும்

**ரத்துச்செய்தல்**

விகிதாசார அடிப்படையில் (ரத்துச்செய்தல் தொடர்பாக “பொது நிபந்தனை” களில்

## பலாபலன்கள் அட்டவணை

| பிரிவு | பலாபலன்கள் | முதன்மை அட்டை மற்றும் வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர் அட்டை(அ.டொலர்)<br>வரையறை (அமெரிக்க டொலர்) |
|---|---|---|
| அ | **அவசர விபத்து மற்றும் மருத்துவச் செலவுகள், வெளியேற்றுதல், நாட்டுக்குத் திருப்பியனுப்புதல்**<br>(முன்னரே உள்ள நிலை அல்லாத) விபத்து அல்லது நோய் காரணமாக மருத்துவமனை அனுமதி, மருத்துவ வெளியேற்றம், தேவை ஏற்படின் நாட்டுக்கு திருப்பியனுப்புவதற்கான மருத்துவ செலவுகள்<br><br>முதல் ஐம்பது டொலர் ($50) ஒவ்வொரு கோரிக்கையின் பேரிலும் கழிக்கப்படுவதுடன் பயணி / வாடிக்கையாளர் அதனைச் செலுத்த வேண்டும் | 75,000 |
| ஆ | **விபத்து மரணம் அல்லது அவயவங்கள் துண்டிப்பு**<br>இழப்பு அட்டவணையின் பிரகாரம் மரணம் அல்லது நிரந்தர ஊனத்துக்குரிய தொகை | 250,000 |
| இ | **விபத்து மரணம் அல்லது அவயவங்கள் துண்டிப்பு (பொதுப் போக்குவரத்துச் சாதனம்)**<br>“ஆ” வில் உள்ளது போன்று, விபத்து பொதுப் போக்குவரத்து சாதனமொன்றில் நிகழுமிடத்து மட்டும் | 500,000 |
| ஈ | **பொதுப்போக்குவரத்து சாதனத்தில் பயணப்பொதிகள் தொலைதல்**<br>**(25% ஒவ்வொரு பொதிக்கும் 5% ஒவ்வொரு பொருளுக்கும்)** | 2,000 |

| | | |
|---|---|---|
| | பொறுப்பேற்கப்பட்ட பயணப்பொதியின் நிரந்தர இழப்புக்கெதிராக காப்புறுதி செய்யப்பட்டவருக்கு இழப்பீடு | |
| உ | **பயணப்பொதிகள் தாமதம்**<br>இலங்கைக்கு வெளியே குறித்த இடத்தை அடைந்ததன் பின்னர் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் காப்புறுதி செய்யப்பட்டவரின் பயணப்பொதி தாமதமான காரணத்தினால் அவசர தேவைக்காகக் கொள்வனவு செய்யப்படும் மருந்துகள், கழிவறைப்பாவனைப் பொருட்கள் , துணிமணிகள் | 500 |
| ஊ | **கடவுச்சீட்டுத் தொலைதல்**<br>கடவுச்சீட்டுப் பிரதியொன்றினைப் பெறுவதற்காக அல்லது பயண ஆவணம் ஒன்றைப் பெறுவதற்காக ஏற்பட்ட நியாயமான செலவு | 750 |
| எ | **தனிப்பட்ட பொறுப்பு**<br>சிவில் கோரிக்கையின் பேரில் மூன்றாம் தரப்பினருக்கு பயணத்தினிடையே காப்புறுதி செய்யப்பட்டவர் தனிப்பட்ட முறையில் செலுத்த வேண்டிய கடப்பாட்டுத்தொகை(உடற்காயம் மற்றும் சொத்துச்சேதம்) | 50,000 |
| ஏ | **சட்ட உதவிக் கட்டணங்கள்**<br>ஏதேனும் அரசாங்கத்தினால் அல்லது வெளிநாட்டு சக்தி யினால் மேற்கொள்ளப்பட்ட தவறான கைது மற்றும் பிழையான தடுத்து வைத்தல் காரணமாக காப்புறுதி செய்யப்பட்டவர் செலுத்திய சட்ட உதவிக் கட்டணங்கள் மீளளிப்பு | 25000 |
| ஐ | **கடத்தல்**<br>விமானம் கடத்தப்பட்டுக் காப்புறுதி செய்யப்பட்டவர் கடத்தல்காரர்களால் தடுத்து வைக்கப் பட்டிருந்த காலத்துக்கு நட்ட ஈடு | 1,000 |
| ஒ | **பயணத்தாமதம் / இடையூறு**<br>காப்புறுதி செய்யப்பட்டவரின் பயணம் விமானத்தின் தொழிநுட்பக் கோளாறு, செயலிழப்பு, பாதகமான காலநிலை, வேலைநிறுத்தம் அல்லது தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நான்கு மணி நேரத்துக்கும் அதிகமான நேரம் தாமதமடைந்தமை காரணமாக உணவு மற்றும் தங்குமிட வசதிக்காகச் செய்த செலவுகள் மீளளிப்பு | 1,500 |

| | | |
|---|---|---|
| ஓ | **பயணம் ரத்துச் செய்யப்படல்**<br>விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இடர்கள் காரணமாகப் பயணம் ரத்துச்செய்யப்பட்டால் பயணத்துக்காகவும் மற்றும் / அல்லது தங்குமிட வசதிக்காகவும் பயணம் ஆரம்பிக்க முன்னர் செய்த தவிர்க்க முடியாத செலவுகளுக்கான மீளளிப்பு. | 1,000 |
| | 24 மணிநேர மருத்துவ உதவிச்சேவைகள்<br>-பயணத்துக்கு முந்திய தகவல் சேவைகள்<br>-தூதரகத் தொடர்புகள்<br>-வானிலை மற்றும் நாணய மாற்று வீதம் தொடர்பான தகவல் உதவி<br>-அவசரகாலத் தகவல் பரிமாற்ற உதவி<br>-அவசரகால நிலையின் போது உள்ளூர் விடுதி வசதி<br>-உரை பெயர்ப்பாளரை தொடர்பு படுத்தல்<br>-பயணப்பொதிக்கான உதவி<br>- தொலைந்த கடவுச் சீட்டுக்கான உதவி | உள்ளடக்கப்பட்டுள்ளது |

## பயணக்காப்புறுதிக்கொள்கை

**மிக முக்கியமானது**

இலங்கையிலிருந்து பிரயாணத்தை ஆரம்பிக்க முன்னதாக இந்த ஆவணத்தை முழுமையாக வாசித்து புரிந்து கொண்டீர்கள் என்பதனை உறுதி செய்து கொள்ளவும்.

உதவிகளையும் மற்றும் கோரிக்கைகளையும் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் குறித்த முழுமையான விபரங்களை மிகக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளவும்.

தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறுமிடத்து கோரிக்கை நிராகரிக்கப்பட வாய்ப்புண்டு.

**சர்வதேசத் தடைகள்**:

பிரயோகிக்கப்படக்கூடிய ஏதேனும் சட்டங்கள் அல்லது நியதிகளை மீறுகின்ற ஏதேனும் செயற்பாடுகளுக்கு இக்காப்புறுதியினால் எதுவித நன்மையோ, பலாபலனோ அல்லது சேவையோ வழங்கப்படமாட்டாது. இது எதுவித கட்டுப்பாடுகளுமின்றி பொருளாதார/வர்த்தக தடைகளையும் உள்ளடக்கும்.

இங்கே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்பவர், இவ்வொப்பந்தத்தின் அடிப்படையாக அமைய வேண்டுமென இணங்கி ஏற்றுக் கொண்ட எழுத்து மூல முன்மொழிவை "**அலியான்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட்"** (இதனகத்துப்பின்னர் "கம்பனி" என அழைக்கப்படும்)நிறுவனத்துக்கு முன்வைத்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதிக் கட்டணத்தையும் செலுத்தியுள்ளார்.

எனவே , கம்பனி இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள விதிகள்,விதிவிலக்குகள், நிபந்தனைகள் அல்லது வரையறைகளுக்குட்பட்டு, இதனகத்து ஏற்பாடு செய்யப்பட்டவாறு காப்புறுதி செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையை விஞ்சாத வகையில் நிகழ்ந்த சேதம் அல்லது இழப்புகளுக்கு, கழிவுத் தொகைக்கு மேலதிகமான தொகையை காப்புறுதி செய்யப்பட்டவருக்கு இழப்பீடாக வழங்க இணங்குகிறது.

## அ) செயற்பாட்டுப் பகுதி

### 1.பிரிவு "அ" : வெளிநாட்டில் திடீர் விபத்து, சுகயீன மருத்துவச் செலவு , வெளியேற்றுதல் மற்றும் திருப்பியனுப்புதல்

1.1 பின்வரும் விடயங்களுக்காக காப்புறுதி செய்யப்பட்டவருக்கு பிரிவு "**அ"** வில் உறுதிசெய்யப்பட்டுள்ள தொகையில் சாதாரணமானதும், நடைமுறையில் உள்ளதுமான தொகையை (ஒவ்வொரு இழப்பு / கோரிக்கையின் பேரிலும் ஐம்பது அமெரிக்க ($50) டொலருக்கு மேற்பட்ட தொகை) பலாபலன்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இழப்பீடாக வழங்கும்

1.1.1 காப்புறுதி செய்யப்பட்டவரால் இலங்கைக்கு வெளியே மருத்துவத் தேவைகளுக்காக பெறப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகள். அதாவது மருத்துவரின் சேவைகள், மருத்துவமனை மற்றும் மருத்துவ சேவைகள் மற்றும் உள்ளூர் அவசர மருத்துவப் போக்குவரத்துச் செலவுகள்.

விபத்துக் காரணாமான பல்வலிக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான பற்சிகிச்சை சேவைகளுக்கு 500 அமெரிக்க டொலர்கள் வரை இழப்பீடு வழங்கப்படும்.

1.1.2 காப்புறுதிக்குள் அடங்கும் ஒரு பிரயாணத்தினிடையே முதன்முறையாகத் தோற்றம் பெற்ற அல்லது வெளிப்பட்ட சுகயீனம் மற்றும் / அல்லது நோய் மற்றும் அல்லது விபத்தின் விளைவாக ஏற்பட்ட உடற் காயங்களுக்கான சிகிச்சைக்காக இலங்கையில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு வெளியேற்றப்படுதல் நிறுவனத்தின் கோரிக்கை நிர்வாகியினால் முன்னதாக அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

1.1.3 மேலே 1.1.2 ல் உள்ளவாறாக இலங்கையில் உள்ள மருத்துவமனைக்கு கோரிக்கை நிர்வாகியின் அனுமதியோடு வெளியேற்றப்படும்போது, பிரிவு "**அ"** வின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட தொகையில் மீதி ஏதேனும் காணப்படின், காப்புறுதி செய்யப்பட்டவருக்கு வெளிநாட்டுப்பயணத்தின் போது ஏற்பட்ட விபத்துக்காயம் அல்லது மற்றும் நோய் /சுகயீனத்துக்காக வெளிநாட்டில் ஆரம்பித்த மருத்துவ சிகிச்சையை இலங்கைக்குள்ளும் தொடர்வதற்கு கம்பனி இழப்பீடு வழங்கும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கம்பனியின் பொறுப்பு விபத்துக்காயம் ஏற்பட்டு மற்றும்/அல்லது நோய் மற்றும் /அல்லது சுகயீனம் முதற்தடவையாக வெளிப்பட்டு 60 நாட்களுக்கும் மற்றும் நடைமுறையில் உள்ள வழமையான மருத்துவ சேவைக் கட்டணங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

1.1.4 காப்புறுதிப்பத்திரம் காலாவதியானதன் பின்னர் செய்யப்படும் மருத்துவச் செலவுகளை "1.1.5" இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது போன்று மீள வழங்க வேண்டிய எதுவித பொறுப்பும் கம்பனிக்குக் கிடையாது.

1.1.5 காப்புறுதிக்குட்பட்ட பயணமொன்றினிடையே முதன்முறையாக தோற்றம் பெற்ற அல்லது வெளிப்பட்ட சுகயீனம் மற்றும் / அல்லது நோய் மற்றும்/அல்லது விபத்தின் விளைவாக ஏற்பட்ட உடற் காயங்களினால் இறப்பு நிகழுமிடத்து காப்புறுதி செய்யப்பட்டவரின் பூத உடலை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான செலவு அல்லது திரும்புதல் விமானப்பயணச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்டில் எரித்தல் அல்லது அடக்கம் செய்தலுக்குரிய செலவுத்தொகை அல்லது சீனா, ஹாங்காங், மெகோ & தாய்வான் போன்ற பிரதேசங்களில் மரணம் சம்பவித்தல் (இறப்பு இலங்கைக்கு வெளியே நிகழுமிடத்து) இவ்வகையான செலவுகள் காப்புறுதிக் கம்பனியின் கோரிக்கை நிர்வாகியினால் இலங்கைக்கு அனுப்புவதற்காக பூத உடலைத் தயார் செய்ய முன்னர் அல்லது உள்ளூரில் அடக்கம் அல்லது தகனம் செய்ய முன்னதாக அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இக்காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு கோரிக்கையின் பேரிலும் தெரிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதித்திட்டத்தின் பிரகாரம் கழிக்க வேண்டிய தொகை பொருந்தும் மற்றும் கம்பனியின் பொறுப்பு பகுதி "**அ"** வின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டுள்ள தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

**பிரிவு "அ" வுக்குரித்தான விலக்கல்கள்**

1.2 உடல் நலத்துக்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடிய அறிகுறிகள் ஏதும் இல்லாத சந்தர்ப்பத்தில் வழமையான அல்லது உடல் ரீதியான அல்லது வேறு பரிசோதனைகளுக்கான செலவுகள் மற்றும் பிரிவு "1.1.3" இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது போன்று இலங்கைக்குள் பெறப்பட்ட மருத்துவ

சிகிச்சைக்குரிய செலவுகளுக்குக் கொடுப்பனவு செலுத்த வேண்டிய எந்த விதமான பொறுப்பும் கம்பனிக்கு கிடையாது.

1.3 காப்புறுதி காலாவதியானதன் பின்னர் மருத்துவச் செலவுகளுக்கு கொடுப்பனவு செலுத்த வேண்டிய எந்த விதமான பொறுப்பும் கம்பனிக்குக் கிடையாது.

1.4 பின்வருவனவற்றினால் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்பட்ட / அடிப்படையில் அமைந்த / தோற்றம் பெற்ற அல்லது ஏதோ வகையில் பின்வருவனவற்றுடன் தொடர்புடைய செலவுகளுக்குக் கொடுப்பனவு செலுத்த வேண்டிய எந்த விதமான பொறுப்பும் கம்பனிக்குக் கிடையாது.

1.4.1 அதாவது காப்புறுதி செய்யப்பட்டவர்,

1.4.1.1 மருத்துவரின் ஆலோசனையை மீறிப் பிரயாணம் செய்தல் ; அல்லது

1.4.1.2 ஒரு குறிப்பிட்ட மருத்துவசிகிச்சை பெறுகின்ற அல்லது அதற்காகக் காத்திருப்புப் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் அல்லது

1.4.1.3 மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகப் பிரயாணம் செய்யும் நிலையில், அல்லது

1.4.1.4 ஒரு மருத்துவ நிலைமைக்குரிய முன்மதிப்பீடு தொடர்பாகப் பிரயாணம் செய்யும் நிலையில்.

1.4.2 தற்கொலை, தற்கொலை முயற்சிகள் அல்லது வேண்டுமென்றோ அல்லது தாமாகவோ ஏற்படுத்திக்கொண்ட காயம்,நோய், உள நல சீர்கேடு, அதீத ஆர்வம், மன அழுத்தம் அல்லது சோர்வு, பாலியல் நோய்கள், குடிப்பழக்கம், மதுபோதை அல்லது போதைப் பொருள் துஸ்பிரயோகம்.

1.4.3 எச் ஐ வியுடன் தொடர்புடைய ஏதேனும் காயங்கள், நோய்கள், மரணம் அல்லது செலவுகள் அல்லது வேறு பொறுப்பு ( மனித உடலில் நோயெதிர்ப்பு சக்தி குறைவு, பிறழ்வு அல்லது வழித்தோன்றல் அல்லது அதனூடாக ஏற்பட்ட மாறுபாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய)

1.4.4 மேற்குறிப்பிட்டவை காரணமாக தோற்றம் பெற்ற கருத்தரிப்பு, மகப்பேறு, கருச்சிதைவு, கருக்கலைப்பு அல்லது சிக்கல்கள். மலட்டுத்தன்மை அல்லது கருத்தரித்தலுடன் தொடர்புபட்ட வேறு பிரச்சினைகள், சேவைகள், குடும்பக்கட்டுப்பாடு என்பன சார்ந்த சேவைகள், வழங்கல்கள், சத்திர சிகிச்சை மற்றும் கருவிகள் அடங்கலாக.

1.4.5 செயற்கைப் பற்கள், பற்சாதனங்கள், செயற்கை அவயவங்கள், கேள்விச்சாதனம், தொடு வில்லை அல்லது விழி நுண் வில்லைகள் அல்லது மூக்குக் கண்ணாடி ( மருத்துவ சிபார்சின் பேரில் அல்லது வேறு விதமாக பெறப்படினும்)

1.4.6 இலங்கையை விட்டு வெளிச்செல்ல முன்னர் காணப்பட்ட நோய்/ சுகயீனத்துக்குரிய சிகிச்சை.

1.4.7 பிறப்பின்போதே காணப்பட்ட குறைபாடுகள்/ உடல் ஊனங்களுக்கான சிகிச்சைகள்

1.4.8 மருத்துவர் அவசியமானது எனக் கருதாத சந்தர்ப்பத்தில் மருத்துவமனையில் அல்லது சிகிச்சை நிலையத்தில் அல்லது தனியார் மருத்துவமனையில் தனியாள் அல்லது பிரத்தியேக அறைக்கு ஏற்பட்ட மேலதிக செலவு

1.4.9 மருத்துவ ரீதியாக அவசியமானது என மருத்துவர் சிபாரிசு செய்யாத அனுமதிக்காத சேவைகள், மருந்துகள், சிகிச்சைகள் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலப்பகுதி

1.4.10 விபத்து தவிர்ந்த சந்தர்ப்பங்களில் தேர்வுசெய்த ஒப்பனை அல்லது பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை

1.4.11 முகப்பருவுக்கான நோய்நிர்ணயம் மற்றும் சிகிச்சை

1.4.12 மருத்துவ நிபுணர்கள் பரீட்சார்த்த ரீதியிலானது எனக் கருதும் உடலுறுப்பு மாற்றீட்டுச் சிகிச்சை.

1.14.13 மருத்துவ பரிசோதனை, தடுப்பு மருந்து செலுத்தல் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி போன்ற குழந்தை பராமரிப்பு அம்சங்கள்

1.4.14 பூரணமான மருத்துவத் தன்மை கொண்டிராத செலவுகள்

1.4.15 இலங்கைக்குள் மேற்கொண்ட செலவுகள்

1.4.16 காயமடைதல், சுகயீனம் காரணமாக ஏற்படாத பார்வைக் குறைபாடு அல்லது கேள்விக் குறைபாடு. கண்ணாடி, தொடுவில்லை, கேள்விச் சாதனங்கள்,மற்றும் அவற்றைப் பொருத்துவதற்கான பரிசோதனை.

1.4.17 அரச மருத்துவ மனையில் சிகிச்சை அல்லது ஏதேனும் இலவச சிகிச்சைகள்/ சேவைகள்

1.14.18 எந்தவொரு தொழிலாளர் இழப்பீட்டுத் திட்டத்தினாலும் உத்தரவாதப் படுத்தபட்டுள்ள மருத்துவச் செலவுகள்

1.4.19 ஆயுர்வேத சிகிச்சைகள்

1.4.20 ஏற்கனவே காணப்பட்ட நோய் அறிகுறிகள் காரணமாக மற்றும் / அல்லது ஏற்கனவே காணப்பட்ட அத்தகைய அறிகுறிகளினால் தூண்டுதல் செய்யப்பட்ட நோய் மற்றும் / அல்லது சுகயீனம்.

1.4.21 மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் பயன்படுத்தும் ஊன்றுகோல் உட்பட செயற்கை அவயவங்கள் அல்லது /மற்றும் ஏனைய மருத்துவ உபகரணங்கள்

**2. பிரிவு "ஆ": தனிப்பட்ட விபத்துகள்**

2.1 காப்புறுதி செய்யப்பட்டவர் அத்தகைய காப்புறுதிக்குட்பட்ட பயணமொன்றினிடையே விபத்தின் காரணமாக காயமடையுமிடத்து பலாபலன்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதத்தினை கம்பனி வழங்கும். அத்தகைய உடல் காயம் ஏற்பட்டு அதன் காரணமாக பனிரெண்டு மாத காலத்துக்குள் பின்வரும் நிகழ்வுகளுக்கு ஏதுவாக அமையுமிடத்து:

2.1.1 காப்புறுதி செய்யப்பட்டவரின் மரணம், கீழேயுள்ள இழப்பு அட்டவணையின் படி;

2.1.2 பூரணமாண உடல் செயழிழப்பு , கீழேயுள்ள இழப்பு அட்டவணையின் படி;

2.2. ஒரு குறித்த விபத்தின் பேரில் மேற்சொன்ன உபவிதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட உபவிதியின் கீழ் அல்லது பலாபலன்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை விடக் கூடுதலாக இக்காப்புறுதியின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது.

2.3 காப்புறுதி செய்யப்பட்டவர் 18 வயதிற்கு குறைந்தவராக இருக்கையில் மரணமடையும் பட்சத்தில் அமெரிக்க டொலர் பத்தாயிரம் (USD10,000) அல்லது பலாபலன்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையின் 50% வீதத்தினை, எது குறைவானதோ அதனை, வழங்க கம்பனி கடமைப்பட்டுள்ளது.

**இழப்பு அட்டவணை:**

| **இழப்பின் தன்மை** | **காப்புறுதித் தொகையின் வீதம்** |
|---|---|
| உயிரிழப்பு | 100% |
| இரு கைகள் அல்லது இரு கால்கள் | 100% |

| | |
|---|---|
| இரு கண்களினதும் பார்வைத்திறன் | 100% |
| ஒரு கை மற்றும் ஒரு கால் | 100% |
| கைகளில் அல்லது கால்களில் ஒன்றும் ஒரு கண்ணில் பார்வையும் | 100% |
| பேச்சு மற்றும் இரு காதுகளினதும் கேள்வித்திறன் | 100% |
| கைகளில் அல்லது கால்களில் ஒன்று | 50% |
| ஒரு கண்ணிண் பார்வைத்திறன் | 50% |
| பேச்சுத்திறன் | 50% |
| இரு காதுகளினதும் கேள்வித்திறன் | 50% |
| ஒரே கையின் பெரு விரல் மற்றும் சுட்டு விரல் | 25% |

**2.4. பிரிவு “ஆ”வுக்குரிய விலக்குதல்கள்**

2.4 பின்வரும் எந்தக் காரணியினாலும் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுகிற, தோன்றுகிற அல்லது அவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள அல்லது அவற்றுடன் தொடர்புபடுத்தக்கூடிய எந்தவொரு கோரிக்கைக்கும் கொடுப்பனவு செய்ய வேண்டிய பொறுப்பு கம்பனிக்குக் கிடையாது.

2.4.1அடுத்தவருடன் தொடுகையை அவசியமாக்கும் கற்றுக் குட்டித்தனமான விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அல்லது விளையாட்டு நிகழ்ச்சிகள் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகள். ஆகாயத்திலிருந்து குதித்தல், பறத்தல், குத்துக்கரணமடித்தல், சாகசச்செயல், மலையேறுதல், பாறையேறுதல், பங்கிப் பாய்ச்சல் அல்லது கயிறு மற்றும் வழிகாட்டியின் துணையுடன் மலையேறுதல், குகைகள் அல்லது நிலத்தடிக் குகைகளுக்குள் பிரவேசித்தல், 6 ம் தரத்துக்கு மேற்பட்ட நீர்வீழ்ச்சியில் தெப்பம் மற்றும் தோணி செலுத்தல், இறங்குகுடை(பரசுட்)யில் குதித்தல், பராகிளைடிங், காரோட்டப்பந்தயங்கள் அல்லது போட்டி நிகழ்ச்சிகள், வேட்டையாடுதல், குதிரைப் பந்தயங்கள், ஆழ்கடல் படகுப்பந்தயங்கள் (கரையிலிருந்து 12 மைல்களுக்கப்பால்), 30 மீட்டர் ஆழக்கடலில் நீச்சலடித்தல், துறைசார் விளையாட்டுகள், பந்தய நிகழ்வுகளில் சவாரி செய்தல் அல்லது வாகனம் செலுத்துதல் .

2.4.2. செல்லுபடியான பரிபூரணமான சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் தம்வசம் இல்லாத நிலையில் இயந்திரம் பொருத்திய வாகனங்களை ( மோட்டார் வாகனம்) செலுத்துவதன் காரணமாக சம்பவிக்கும் விபத்தின் விளைவாக ஏற்படும் இழப்பு அல்லது பாதுகாப்பு தலைக்கவசம் அணியாத நிலையில் ஈருருளியைச் செலுத்துதல்.

2.4.3 ஒரு கட்டணம் செலுத்தும் பயணியாக, விமானப்பணியாளராக, அல்லது விமானியாக நேரிடும் அனைத்து ஆகாயமார்க்க இடர்கள்.

2.4.4 சாதாரணமான கைவேலை காரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் இழப்புகள் (மதுபானக் கடை, உணவு பறிமாறுதல், பழம் பறித்தல் அது போன்ற இயந்திரங்களின் அல்லது மின்னுபகரணங்களின் துணையின்றி செய்யக்கூடிய இலகு பணிகள் தவிர்ந்த)அல்லது அபாயகரமான தொழில்கள், அவசியமற்ற இடர்களுக்கு தம்மை உள்ளாக்குவது (மனித உயிரைக்காப்பாற்றுவது தவிர்ந்த) அல்லது ஏதேனும் குற்றச்செயல் அல்லது சட்ட விரோதச் செயலில் ஈடுபடல்

2.4.5. குளிர்கால விளையாட்டுக்கள்

2.4.6 பக்டீரியா தாக்கம் காரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாக, முழுகையாக, அல்லது பகுதியளவில் நிகழும் இழப்பு (தவறுதலாக ஏற்படும் வெட்டுக்காயம் மற்றும் காயம் ஊடாக ஏற்படும் தொற்று தவிர்ந்த)

2.4.7 முன்னரே காணப்பட்ட நிலைமை

2.4.8 மர்மமான முறையில் அல்லது வேறுவிதமாக காப்புறுதி செய்யப்பட்டவர் காணாமல் போதல்.

2.4.9 பிரிவு "**அ"** வுக்குரிய அனைத்து விலக்கல்களும்

## 3 பிரிவு "இ" தனிப்பட்ட விபத்து / மரணம்-பொதுப்போக்குவரத்துச் சாதனம்

3.1 விபத்தின் காரணமாக கீழே அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் இழப்பு காப்புறுதி செய்யப்பட்டவருக்கு ஏற்படின் இழப்புக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள வீதப்படி கம்பனி நட்டஈடு வழங்கும். காயமானது பயணியாக வாகனத்தில் பயணிக்கும்போதோ அல்லது விமானத்தில் ஏறும்போது அல்லது இறங்கும்போது நிகழ்ந்ததாக இருக்க வேண்டும். விபத்துக் காரணமான இழப்பு விபத்து நிகழ்ந்து 365 நாட்களுக்குள் இடம் பெற வேண்டும்.

ஒரு விபத்து காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட இழப்புகள் சம்பவிக்குமிடத்து கூடிய தொகை எதுவோ அது மாத்திரம் வழங்கப்படும்.

3.2 காப்புறுதி செய்யப்பட்டவர் 18 வயதிற்கு குறைந்தவராக இருக்கையில் மரணமடையும் பட்சத்தில் அமெரிக்க டொலர் பத்தாயிரம் (USD 10,000) வழங்க கம்பனி கடமைப்பட்டுள்ளது.

| **இழப்பின் தன்மை** | **காப்புறுதித் தொகையின் வீதம்** |
|---|---|
| உயிரிழப்பு | 100% |
| இரு கைகள் அல்லது  இரு கால்கள் | 100% |
| இரு கண்களினதும் பார்வைத்திறன் | 100% |
| ஒரு கை மற்றும் ஒரு கால் | 100% |
| கைகளில் அல்லது கால்களில் ஒன்றும் ஒரு கண்ணில் பார்வையும் | 100% |
| பேச்சு மற்றும் இரு காதுகளினதும் கேள்வித்திறன் | 100% |
| கைகளில் அல்லது கால்களில் ஒன்று | 50% |
| ஒரு கண்ணிண் பார்வைத்திறன் | 50% |
| பேச்சுத்திறன் | 50% |
| இரு காதுகளினதும் கேள்வித்திறன் | 50% |
| ஒரே கையின் பெரு விரல் மற்றும் சுட்டு விரல் | 25% |

3.3 "இழப்பு"எனும்போது:

(அ) கை அல்லது காலைப் பொறுத்தவரை  மணிக்கட்டு அல்லது கணுக்கால் ஊடாக அல்லது அவற்றுக்கு மேல் துண்டிக்கப்படுதலையும்,

(ஆ) கண்ணைப் பொறுத்தவரை  மீளப்பெறமுடியாத கண்ணின் முழுமையான பார்வையையும்,

(இ) பெருவிரல், சுட்டு விரல் என்பது குறித்த விரல் உள்ளங்கையுடன் இணையும் இடத்தின் ஊடாக அல்லது அதற்கு மேலாக துண்டிக்கப்படுவதனையும்,

(ஈ) பேச்சு, கேள்வி என்பது மீளப்பெறமுடியாத முழுமையான பேச்சுத்திறன் இழப்பு அல்லது கேட்கும் திறன் இழப்பையும் ,  குறிக்கும்.

3.4 காப்புறுதி செய்யப்பட்டவர் 18 வயதிற்கு குறைந்தவராக இருக்கையில் மரணமடையும் பட்சத்தில் பலாபலன்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில்  அமெரிக்க டொலர் பத்தாயிரம் (USD 10,000) வழங்க  கம்பனி கடமைப்பட்டுள்ளது.

3.5 பின்வரும் எந்தக்காரணியினாலும் நேரடியாக அல்லது மறைமுகமாக, முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்படும் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

(அ) பக்ரீறியா தொற்று( விபத்துக்காயம் அல்லது காயம் ஊடாக ஏற்படும் தொற்று தவிர்ந்த) அல்லது வேறு ஏதேனும் நோய்கள்

(ஆ) காயமடைவதனால் மாத்திரம் அவசியமாகும் மருத்துவ சிகிச்சை அல்லது சத்திர சிகிச்சை

(இ)குடலிறக்கத்தை(ஹெர்னியா)ஏற்படுத்தக்கூடிய விபத்து

(ஈ) முன்னரே காணப்பட்ட நிலைமைகளுக்காக மருத்துவரின் சிபாரிசின் பேரில் ஆலோசனை பெறுதல், சிகிச்சை பெறுதல் மற்றும் பராமரிப்பு

3.6 மர்மமான முறையில் அல்லது வேறுவிதமாகக் காப்புறுதி செய்யப்பட்டவர் காணாமல் போதல்.

3.7 ஒரு கட்டணம் செலுத்தும் பயணியாக, விமானப்பணியாளராக, அல்லது விமானியாக நேரிடும் அனைத்து ஆகாய மார்க்க இடர்கள்.

4 **பிரிவு "ஈ" தொலைந்து போன ஏற்கப்பட்ட விமானப்பயணப்பொதிகள்**

4.1 காப்புறுதி செய்யப்பட்டவரினால் இலங்கையின் புவியியல் பரப்புக்கு வெளியே அவரால் விமான நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டு முழுமையாக மற்றும் நிரந்தரமாக தொலைந்து போன பயணப்பொதிகளின் பேரில் பலாபலன்கள் அட்டவணையில் பிரிவு "**ஈ**" க்குரியதாக குறிப்பிடப்பட்டுள்ள தொகை வரை காப்புறுதி செய்யப்பட்டவருக்குக் கம்பனி இழப்பீடு வழங்கும்.

**பிரிவு "ஈ" க்குரிய விசேட நிபந்தனைகள்**

4.2 உங்களது உடைமைப்பொருள் விமான நிறுவனத்தின் அல்லது வேறு பயண நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற போது, காப்புறுதி செய்யப்பட்டவர் உடைமை தொலைந்து போனமை சம்பந்தமாக விமான நிறுவனத்துக்கு அல்லது வேறு பயண நிறுவனத்துக்கு அறிவித்து அவர்களிடமிருந்து உடைமை தொலைந்தமை பற்றிய முரண்பாட்டு அறிக்கையை / உத்தியோகபூர்வக் கடிதத்தினைப் பெற்று கோரிக்கை நிர்வாகியிடம் கையளிக்க வேண்டும்.

4.3 அத்தகைய முழுமையான நிரந்தர இழப்பை விமான நிறுவனம் பொறுப்பேற்காத வரை இழப்பீடு வழங்கும் பொறுப்பு கம்பனிக்கு ஏற்படாது. கம்பனியின் பொறுப்பு விமான நிறுவனத்தினால் வழங்கப்பட்ட / வழங்கப்படக்கூடிய ஏதேனும் நட்டஈட்டுத் தொகைக்கு மேற்பட்ட தொகையாக இருக்கும்.

4.4 அத்தகைய பயணப்பொதிகள் வேறு காப்புறுதிகளினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றின் மதிப்பீட்டு விகிதப்படியே இக்காப்புறுதியின் கீழ் இழப்பீடு வழங்கப்படும்.

4.5 விமானப் பயணங்களின் போது தொலைந்த பயணப்பொதிகளின் பேரிலான காப்புறுதி உத்தரவாதம் பொதிகளின் மற்றும் பெறுமதிவாய்ந்த உடைமைகள் சம்பந்தமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே செல்லுபடியாகும்

4.6 தொலைந்த உடைமையை மாற்றீடு செய்வதற்கும் அல்லது பலாபலன்கள் அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிக பட்சத்தொகை வரையான உடைமையின் உண்மைப் பெறுமதியை வழங்கும் உரிமை கம்பனிக்கே உரியது.

**பிரிவு "ஈ" க்குரிய விலக்கல்கள்**

4.7 பின்வரும் சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யும் பொறுப்பு கம்பனி மீது சாட்டப்படாது:

4.7.1 சுங்க அல்லது போலீஸ் அல்லது வேறு அதிகாரிகளினால் பறிமுதல் செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல் காரணமாக காப்புறுதி செய்யப்பட்டவரின் உடைமை அல்லது பயணப்பொதிகளுக்கு ஏற்படும் இழப்பு.

4.7.2 உடைமை அல்லது பயணப்பொதிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளுக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டவர் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கத்தவறியமை காரணமாக ஏற்படும் இழப்பு.

4.7.3 முத்திரைகள், பணம், எல்லா விதமான பிணைப்பத்திரங்கள், பயணச்சீட்டு, ஆவணங்கள், தொடுவில்லை / விழி நுண் வில்லை, மூக்குக்கண்ணாடி, செயற்கைப்பற்கள், கேள்விச்சாதனம், இலகுவில் உடையக்கூடிய பொருட்கள் அல்லது வியாபாரப் பொருட்கள் அல்லது மாதிரிகள்

4.7.4 விலங்குகள், பறவைகள் அல்லது மீன்கள்

4.7.5 நுகர்வுப்பொருட்கள் மற்றும் அழியக்கூடியவை

4.7.6 செயற்கை அவயவங்கள்

4.7.7 இசைக்கருவிகள்

4.7.8 கேள்விப்புலன் உபகரணங்கள்

4.7.9 உள்ளார்த்தமான  பெறுமானத் தேய்வு

4.7.10 பூச்சி புழுக்களினால் ஏற்படும் பாதிப்பு

4.7.11 கையோடு கொண்டு செல்லும் பயணப்பொதிகள் காப்புறுதிக்குட்படாது

4.7.12 பொதியின் பகுதியான சேதம் அல்லது அத்தகைய பொதியிலிருந்து தொலைந்த பொருட்கள் காப்புறுதிக்குட்படாது

**பிரிவு "உ" : விமானப் பயணப்பொதிகள்  தாமதமாதல்**

5.1 காப்புறுதி செய்யப்பட்டவர் இலங்கைக்கு வெளியேயுள்ள ஒரு இடத்துக்கு வருகை தந்து 4 மணி நேரத்துக்கு மேலாகியும்  அவரது பயணப்பொதி வந்து சேராதவிடத்து அவரது ஏற்கப்பட்ட பயணப்பொதியிலுள்ள  கழிவறைப் பாவனைப் பொருட்கள், மருந்து வகைகள், துணிமனிகளுக்கு மாற்றீடாக அவசரக் கொள்வனவுகளை மேற்கொள்வதற்குரிய தொகையை பலாபலன்கள் அட்டவணையில் பிரிவு "**ஈ"** இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வரை  கம்பனி  மீளளிப்பு செய்யும்.

**பிரிவு "உ" : க்குரிய விசேட நிபந்தனைகள்**

5.2 காப்புறுதி செய்யப்பட்டவர் பயணப்பொதி தாமதமாவதை அறிந்த கையோடு அது தொடர்பில், விமான நிறுவனத்தினால் அவரது பயணப்பொதி கையளிக்கப்படவில்லை என்பதையும் தாமதமான காலப்பகுதியையும் உறுதிப்படுத்தி  எழுத்து மூல ஆவணம் ஒன்றை கோரிக்கை நிர்வாகியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பது கம்பனி பொறுப்பைக் கையேற்பதற்கு ஒரு முன்னுறு நிபந்தனையாகும்.

5.3 விமான நிறுவனம் தாமதத்துக்குப்  பொறுப்பேற்காத வரை இழப்பீடு வழங்கும் பொறுப்பு கம்பனிக்கு ஏற்படாது.கம்பனியின் பொறுப்பு விமான நிறுவனத்தினால் வழங்கப்பட்ட / வழங்கப்படக்கூடிய ஏதேனும் நட்டஈட்டுத் தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு மட்டுப் படுத்தப்படும்.

5.4 கோரிக்கையின் பேரிலான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு கொள்வனவுப் பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகளுடன் தாமதத்தை நிரூபிக்கும் சான்றுகளும் சமர்ப்பிக்கப் படவேண்டும்

5.5 தாமதம் ஏற்படுவதற்கு முன்னர் செய்யப்பட்ட செலவு

**6 பிரிவு: "ஊ" கடவுச்சீட்டுத் தொலைதல்**

6.1 காப்புறுதி செய்யப்பட்டவரின் கடவுச்சீட்டு தொலைந்து போகும் சந்தர்ப்பங்களில் இலங்கையின் புவியியல் பரப்புக்கு வெளியே அதன் பிரதியொன்றை அல்லது புதிய ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செலவுகளை பலாபலன்கள் அட்டவணையில் பிரிவு **"ஊ"** க்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகை வரை கம்பனி காப்புறுதி செய்யப்பட்டவருக்கு இழப்பீடாக வழங்கும்.

**பிரிவு "ஊ" வுக்குரிய விலக்கல்கள்**

6.2 சுங்க அல்லது போலீஸ் அல்லது வேறு அதிகாரிகளினால் காப்புறுதி செய்யப்பட்டவரின் கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்படுவதனால் அல்லது தடுத்து வைக்கப்படுதலினால் இழப்பு ஏற்படின் கம்பனி இழப்பீடு வழங்காது.

6.3)தொலைந்து போனதை அறிந்த நேரம் முதல் 24 மணித்தியாலங்களுக்குள் சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையத்துக்கு உரிய நேரத்தில் அதற்குரிய உத்தியோகபூர்வ சான்று பெறப்பட்டு முறைப்பாடு செய்யப்படாத சந்தர்ப்பம்.

6.4) கடவுச்சீட்டுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளுக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டவர் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கத்தவறியமை காரணமாக ஏற்படும் இழப்பு.

6.5) புதிய கடவுச்சீட்டு பெறுவதில் ஏற்பட்ட போக்குவரத்து செலவுகள்

7**. பிரிவு: "எ" தனிப்பட்டபொறுப்பு**

7.1 தனிப்பட்ட முறையில் காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்பேற்க வேண்டி ஏற்படும் சட்ட ரீதியான பொறுப்புகள் அதாவது காப்புறுதிக்குள் அடங்கும் ஒரு பிரயாணத்தின்போது மூன்றாம் தரப்புக்கு ஏற்படும் காயங்கள் சொத்து அழிவுகள் காரணமாகச் செலுத்த வேண்டி ஏற்படும் சிவில் கோரிக்கைகள் மீதான கொடுப்பனவுகளுக்கு பலாபலன்கள் அட்டவணையில் பிரிவு "**எ"** க்கு உரியதாக குறிப்பாக கூறப்பட்டுள்ள தொகை (கழிவுத்தொகை நீங்கலாக) வரை கம்பனி காப்புறுதி செய்யப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கும்.

**பிரிவு "எ"வு க்குரிய விசேட நிபந்தனைகள்**

7.2 தனிப்பட்ட முறையில் காப்புறுதி செய்யப்பட்டவர் மூன்றாம் தரப்பினருக்கு ஏற்பட்ட உடற் காயத்தின் பேரில் பொறுப்பேற்க வேண்டி ஏற்படும் சட்ட ரீதியான பொறுப்புகளுக்கு கழிவுத்தொகை பிரயோகிக்கப்பட மாட்டாது.

7.3 இப்பிரிவின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டவருக்குக் கம்பனி இழப்பீடு செய்ய வேண்டிய தொகை வெளிநாட்டு நீதிமன்றம் ஒன்றின் இறுதித் தீர்மானத்தின்படியான செலவுத் தொகையாகும் அல்லது வேறு விதமாக கம்பனியால் முன்னதாக சம்மதம் அளிக்கப்பட்ட தொகையாக இருக்கும். காப்புறுதி செய்யப்பட்டவருக்கு எதிராக இலங்கைக்குள் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமிடத்து , அவர்,

7.3.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் முகவரிக்கு அது குறித்து உடனடியாக எழுத்து மூல அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்..

7.3.2 கம்பனியின் எழுத்து மூல முன்னனுமதியின்றி எந்தவித பாதுகாப்புச் செலவுகளைச் செய்யவோ, பொறுப்பினைப் பாரம் எடுக்கவோ, பணம் செலுத்தவோ அல்லது செலுத்த முயற்சிக்கவோ அல்லது ஏதேனும் கோரிக்கை அல்லது கோரிகையாளரின் பேரில் ஏற்புகளை செய்யவோ, அல்லது ஒப்பந்தக் கடப்பாடுகளை ஏற்றுக்கொள்ளவோ கூடாது. எனினும் கம்பனி காப்புறுதி செய்யப்பட்டவரின் சார்பில் எந்த நேரத்திலும் ஏதும் வழக்கு நடவடிக்கையினைக் கையேற்று ( கம்பனிக்கு எதுவித கடமைப்பாடும் கிடையாது) அவருக்கு ஆதரவாக வழக்கை நடாத்தி வழக்கின் பேரில் அல்லது கோரிக்கையின் பேரில் தீர்வினைப் பெறுவதற்காக சட்டத்தரணிகளை நியமனம் செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டவர் தமது உதவி, ஒத்தாசைகளை வழங்க வேண்டும்

7.4காப்புறுதி செய்யப்பட்டவரின் சம்மதமின்றி கம்பனி எந்தவிதக் கோரிக்கைக் கொடுப்பனவுகளையும் மேற்கொள்ள மாட்டாது. ஆனால் கம்பனியால் பரிந்துரை செய்யப்பட்ட ஒரு கோரிக்கையை காப்புறுதி செய்யப்பட்டவர் மறுத்துரைக்கும் சந்தர்ப்பத்தில் கம்பனியின் பொறுப்பு கோரிக்கையைத் தீர்வு செய்வதற்குச் செலுத்தப் போதுமான தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

**பிரிவு “எ”வு க்குரிய விலக்கல்கள்**

7.5 பின்வரும் சந்தர்ப்பங்களில் கம்பனியின் பொறுப்பு தவிர்க்கப்பட்டுள்ளது;

7.5.1 ஊழியர் ஒருவரின் பேரில் உள்ள பொறுப்பு (நிரந்தர அல்லது தற்காலிக தொழில் ஒப்பந்தத்தின் கீழ்)

7.5.2 காப்புறுதி செய்யப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு, சக ஊழியர்களுக்கு, தொழிலாளிகளுக்குச் சொந்தமான அல்லது உடன்

பயணிக்கும் பிரயாணிக்குச் சொந்தமான உடைமைகளுக்கு ஏற்படும் இழப்பு அல்லது / மற்றும் அவர்களது உடற் காயங்கள்.

7.5.3 ஏதேனும் உடற்காயங்கள் அல்லது / மற்றும் உடைமைக்குப் பின்வரும் காரணிகளால் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் இழப்பு அல்லது சேதம்;

7.5.3.1 காப்புறுதி செய்யப்பட்டவருக்குச் சொந்தமான அல்லது அவரின் கண்காணிப்பில், கட்டுப்பாட்டில், தொழில்துறையில் உள்ள கால்நடைகள்.

7.5.3.2 ஏதேனும் வேண்டுமென்றே, தீங்கிழைக்கும் நோக்கம் கொண்ட, குற்றவியல், அல்லது சட்ட விரோத நடவடிக்கை, தவறு அல்லது கவலையீனம்.

7.5.3.3 வர்த்தக, வியாபார அல்லது உயர் தொழில், தொழில் அல்லது பதவியின் பின்விளைவு

7.5.3.4 (பரசுட்) இறங்கு குடையிலிருந்து குதித்தல், விமானத்திலிருந்து குதித்தல், சூடான காற்று நிரப்பிய பலூனில் சஞ்சரித்தல் அல்லது சுடுகலன்கள் பாவனை அல்லது வேறு ஏதும் அபாயகரமான அல்லது ஆபத்தான செயற்பாடுகளில் ஈடுபடல்.

7.5.3.5 வாகனம், விமானம் அல்லது கப்பலின் உடைமை, உரிமை அல்லது பாவனை.

7.5.3.6 மது, மாயத்தோற்றவஸ்து, போதைவஸ்து (மருத்துவ ரீதியாகப் பரிந்துரை செய்யப்பட்டவை அல்லாத ) க்களின் பாவனை அல்லது தவறான பாவனை அல்லது போதை வஸ்துவுக்கு அடிமையாதல்.

7.5.3.7 காணி, கட்டடம் சம்பந்தமான ஏதேனும் வகையான உடைமை அல்லது குடியிருத்தல் (தற்காலிகமாக தங்கியிருத்தல் தவிர்ந்த)

8. **பிரிவு "ஏ" சட்ட ரீதியான கட்டணங்கள்**

8.1 காப்புறுதிக்குட்பட்ட ஒரு பயணத்தினிடையே ஏதேனும் அரசொன்றினால் அல்லது வெளிநாட்டுச்சக்தி ஒன்றினால் தவறுதலான கைது அல்லது பிழையான தடுத்து வைப்பின்போது ஏற்படும் செலவுகளுக்குப் பலாபலன்கள் அட்டவணையின் "**ஏ**" பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கம்பனி மீளளிப்பு செய்யும்.

9**. பிரிவு "ஐ": கடத்தல் பாதுகாப்பு**

9.1 தாம் பயணம் செய்த கடத்தப்பட்ட விமானம் ஒன்றில் கடத்தல்காரர்களினால் காப்புறுதி செய்யப்பட்டவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதிக்கு பலாபலன்கள் அட்டவணை “**ஐ”** பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைக் கம்பனி வழங்கும்.

## 10.**பிரிவு “ஓ”: தாமதித்த பயணம்/இடைத்தடங்கல்**

10.1 காப்புறுதி செய்யப்பட்டவர் காப்புறுதிக்குட்பட்ட பயணம் ஒன்றினை மேற்கொள்வதற்காகப் பதிவு மேற்கொண்ட விமானம் தொழிநுட்பக் கோளாறு / வேறு கோளாறு / செயலிழப்பு, பாதகமான காலநிலை, கைத்தொழில் வேலை நிறுத்தம், விமான ஊழியர்களின் பணிப்பகிஸ்கரிப்பு காரணமாகப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டிய நேரத்தை விட 4 மணி நேரத்துக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படின் தேவையான மேலதிக செலவுக்காக (உணவு, தங்குமிடம் மட்டும்) கம்பனி போதுமான தொகையைப் பலாபலன்கள் அட்டவணையில் **“ஓ”** பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்சத் தொகையை இழப்பீடாக வழங்கும்.

**பிரிவு “ஓ” வுக்குரிய விலக்கல்கள்**

பின்வரும் சந்தர்ப்பங்களில் கம்பனி இழப்பீடு வழங்காது;

10.1.1 விமான நிறுவனத்தின் அறிவுரைகளுக்கு ஏற்ப காப்புறுதி செய்யப்பட்டவர் உரிய நேரத்துக்கு வருகைதந்து உரிய முறையில் பயண நடைமுறைகளை (செக்-இன்) மேற்கொள்ளத் தவறுவதன் காரணமாக ஏற்படும் தாமதம்

10.1.2 சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அல்லது அதனையொத்த அதிகார சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விமானம் சேவையிலிருந்து அகற்றப்படல்.

10.1.3 தொழிநுட்பக் கோளாறு / செயலிழப்பு, பாதகமான காலநிலை, பொது மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட்ட அல்லது காப்புறுதி செய்யப்பட்டவர் காப்புறுதிக்குட்பட்ட பயணம் ஆரம்பமாக முன்னரே அறிந்திருந்த ஒரு கைத்தொழில் வேலை நிறுத்தம்

10.1.4 அட்டவணைப்படுத்தப்பட்ட விமானத்தில் ஏறுவது தடுக்கப்படல்

10.1.5 காப்புறுதி செய்யப்பட்டவர் அவரது பயணத்துணைவர், அவரது குடும்ப அங்கத்தவர்களின் வியாபாரம் அல்லது ஒப்பந்தம் காரணமான கடப்பாடு.

10.1.6 திட்டத்தில் மாற்றம் நிகழ்தல் அல்லது காப்புறுதி செய்யப்பட்டவர் அவரது பயணத்துணைவர் , அவரது குடும்ப அங்கத்தவர்கள் குறித்த காப்புறுதிக்குட்பட்ட பயணத்தை மேற்கொள்ள விரும்பாமை.

10.1.7 தாமதத்திற்கு முன்னர் ஏற்பட்ட செலவு

10.1.8 இலங்கைக்குள் செய்யப்பட்ட செலவு

10.1.9 ஏதேனும் அதிகார சபையினால் விசா மறுக்கப்படல்

10.1.10 பிழையான இணைப்புக் காரணமாக தோற்றம் பெறும் கோரிக்கை

**பிரிவு “ஓ” வுக்குரிய விசேட நிபந்தனை**

விமான நிறுவனம் பொறுப்பை ஏற்காதவரை கொடுப்பனவுக்கான பொறுப்பை கம்பனி ஏற்காது. விமான நிறுவனம் ஏதேனும் இழப்பீட்டை வழங்கினாலோ அல்லது வழங்க முன்வருமிடத்தோ , கம்பனியின் பொறுப்பு மேலதிக தொகை ஏதுமிருப்பின் அதுவாகும்.

## 11. பிரிவு “ஓ” : பயணம் ரத்துச் செய்யப்படல்

11.1 பயணச்சீட்டுக்கட்டணம் செலுத்தியது முதல் பயணத்திகதி வரையான காலப்பகுதியில் பயணம் ரத்துச்செய்யப்படுவதன் விளைவாகக் காப்புறுதி செய்யப்பட்டவர் மீது சட்ட ரீதியாக பொறுப்புச்சாட்டப்பட்டுள்ளதும் வேறு மூலங்களிலிருந்து மீளப்பெற முடியாதவையுமான அவரால் முன்னரே செலுத்தப்பட்ட, பயணம் மற்றும் / அல்லது தங்குமிட வசதிகளுக்கான செலவுகளை கம்பனி பலாபலன்கள் அட்டவணையில் **“ஓ”** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைவரை மீளளிப்பு செய்யும்.

(i) காப்புறுதி செய்யப்பட்டவரின் அல்லது அவரது பயணத்துணைவரின் அல்லது அவரது உடன் குடும்ப அங்கத்தவரின் எதிர்பாராத மரணம், பாரதூரமான காயம் அல்லது சுகயீனம்.

(ii) காப்புறுதிகுட்பட்ட ஒரு பயணம் ஆரம்பிக்க முன்னர் 10 நாட்களுக்கு அல்லது அதற்குக் குறைவான நாட்களுக்கிடையே காப்புறுதி செய்யப்பட்டவரின் வாசஸ்தலம் தற்செயலாக நிகழ்ந்த விபத்துக்காரணமாகச் சேதமடைதல் அல்லது குடியிருக்கத் தகுதியற்றதாக ஆக்கப்படுதல் அல்லது ஒரு திருட்டுச்சம்பவம், காப்புறுதி செய்யப்பட்டவரின் வீட்டின் மீது, வியாபார நிலையத்தின் மீது தாக்குதல் எச்சரிக்கை தொடர்பான விசாரணைக்காகக் காப்புறுதி செய்யப்பட்டவரின் பிரசன்னம் தேவைப்படுதல்.

**பிரிவு “ஓ” வுக்குரிய விலக்கல்கள்**

**பின்வரும் சந்தர்ப்பங்களில் கம்பனியின் பொறுப்பு தவிர்க்கப்பட்டுள்ளது:**

11.1 மன அழுத்தம் அல்லது ஆர்வம், மன நிலைக்குறைப்பாடு, நரம்பியல் குறைபாடு, மது அருந்துதல், போதைப்பொருளுக்கு அடிமையாதல், மிகைத்த மருந்துப்பாவனையுடன் தொடர்புபட்ட கோரிக்கை.

11.1.2 விபத்துக் காரணமாக அல்லாத ஒப்பனை அல்லது பிளாஸ்டிக் சத்திர சிகிச்சைக்கான கோரிக்கை

11.1.3. கருத்தரிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலைமைகளுக்கான கோரிக்கை

11.1.4.ஏதேனும் நாட்பட்ட நிலைமைகள்

11.1.5 மருத்துவரின் யோசனையை மீறிக் காப்புறுதி செய்யப்பட்டவர் பயணித்தல்

11.1.6 அ) போக்குவரத்து வழங்குநர் (ஆ) அவரது முகவர்(இ) காப்புறுதி செய்யப்பட்டவரின் முகவர், ஆகியோரின் தவறுகள்.

11.1.7 அரச விதிகள் அல்லது பொது அதிகாரசபையின் விதிகள்

11.1.8 காப்புறுதிக்குட்பட்ட பயணத்துக்கான பதிவு மேற்கொள்ள முன்னரே மேற்கொள்ளப்பட்டிருந்த அல்லது முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்த வேலை நிறுத்தம், தொழில் பிணக்கு.

11.1.9 பயணச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்டின் அல்லது சீனா, ஹாங்காங், மகோ(macau) & தாய்வான் ஆகிய பிரதேசங்களின் துறைமுக அதிகார சபை அல்லது சிவில் விமான அதிகார சபை அல்லது அதற்குச் சமமான நிறுவனத்தின் கட்டளைப்பிரகாரம் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகப் பொதுப் போக்குவரத்துச் சாதனம் சேவையை விலக்கிக் கொள்ளுதல் காரணமாக ஏற்படும் தாமதம்

11.1.10. எச்.ஐ.வி (மானுட நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாடு வைரஸ்) உடன் அல்லது மற்றும் எயிட்ஸ்(நோய் எதிர்ப்புக் குறைபாடு ) உடன் அல்லது / மற்றும் அவற்றின் பிறழ்வு அல்லது மாறுபாடுகளுடன் நேரடியாக மற்றும் மறைமுகமாகத் தொடர்புடைய நோய்கள், காயம் அல்லது மரணம்.

11.1.11 காப்புறுதி செய்யப்பட்டவர் அவரது பயணத்துணைவர், அவரது குடும்ப அங்கத்தவர்களின் வியாபாரம் அல்லது ஒப்பந்தம் காரணமான கடப்பாடு காரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாக பயணம் தடைப்படல்.

11.1.12 திட்டத்தில் மாற்றம் நிகழ்தல் அல்லது காப்புறுதி செய்யப்பட்டவர் அவரது பயணத்துணைவர், அவரது குடும்ப அங்கத்தவர்கள் குறித்த காப்புறுதிக்குட்பட்ட பயணத்தை மேற்கொள்ள விரும்பாமை.

11.1.13 ஏதேனும் அதிகார சபையினால் விசா மறுக்கப்படுதல்

**ஆ. வரைவிலக்கணங்கள்**

பின்வரும் சொற்கள் அல்லது பதங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் அவை பிரயோகிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கீழே விபரிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருக்கும். பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தைப் பொறுத்து ஒருமைச் சொல்லுக்கு வழங்கப்படும் பொருள் பன்மைச் சொல்லுக்கும் பொருந்தும்.

"**காப்புறுதி செய்யப்பட்டவர்**" என்பது எச்.எஸ்.பீ.சி (இலங்கை) யினால் வழங்கப்பட்ட முதன்மைக் கடனட்டை மற்றும் வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர் கடன் அட்டை உரிமையாளர்களான 75 வயதுக்கு மேற்பட்டவர்கள், கடன் அட்டை உரிமையாளருடன் காப்புறுதிக்குட்பட்ட பயணம் செய்யும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் இரு வழி விமானப்பயணச்சீட்டை மேற் குறிப்பிட்ட கடனட்டைகளின் ஊடாகக் கொள்வனவு செய்பவர்கள்

"**உடனடிக் குடும்பம்"** என்பது காப்புறுதி செய்யப்பட்டவரினால் பராமரிக்கப்படும் அவருடன் நிரந்தரமாக வசிக்கும் 75 வயதுக்கு மேற்படாத சட்டபூர்வ மனைவி **,** 18 வயதுக்குற்பட்ட பிள்ளைகள் (முழுமையான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் பெற்றோரின் தயவில் தங்கிருக்கும் திருமணமாகாத 23 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் ).

**"உடனடிக் குடும்ப அங்கத்தவர்கள்"** என்பது **"ஓ**" பிரிவைப் பொறுத்தவரை (பயணம் கைவிடப்படுதல்) காப்புறுதி செய்யப்பட்டவரின் சட்ட ரீதியான மனைவி,பிள்ளைகள், வளர்ப்புப் பிள்ளைகள், சகோதரர்கள், உடன்பிறவா சகோதர்கள், பெற்றோர்கள், வளர்ப்புப் பெற்றோர்கள் ,பாட்டன் பாட்டி, பேரப்பிள்ளைகள், சட்டப்படி பிள்ளைகள்.

**"அட்டை உரிமையாளர்"** என்பது எச்.எஸ்.பீ.சி (இலங்கை) யினால் வழங்கப்பட்ட முதன்மைக் கடனட்டை மற்றும்வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர் கடன் அட்டையைப் பயன்படுத்தி தமது இரு வழிப்பயணச் சீட்டினைக் கொள்வனவு செய்பவர்.

**"கால உச்ச வரம்பு"** என்பது இலங்கையிலிருந்து வெளியேறிய நாள் முதல் 90 நாட்கள். ஒவ்வொரு பயணத்துக்கும் இது பொருந்தும்.

**"காப்புறுதிக்குட்பட்ட பயணம்**" என்பது எச்.எஸ்.பீ.சி (இலங்கை) யினால் வழங்கப்பட்ட முதன்மைக் கடனட்டை மற்றும் வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர்

கடன் அட்டையைப் பயன்படுத்தி வெளியேற முன்னர் தமது இரு வழிப் பயணச்சீட்டின் நூறு வீதப் பெறுமதியைச் செலுத்திக் கொள்வனவு செய்து அப்பயணச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்டிற்கான பயணத்துக்காக இலங்கையிலிருந்து வெளியேறியதிலிருந்து காப்புறுதி காலாவதியாகு முன்னர் இலங்கைக்கு திரும்பும் வரையான முதல் 90 நாட்கள். பயணம் இலங்கை சர்வதேச விமான நிலையத்தில் ஆரம்பித்து அங்கேயே முடிவடைந்ததாகக் கருதப்படும்.

"**காப்புறுதிக்காலம்"** எச்.எஸ்.பீ.சி (இலங்கை) யினால் வழங்கப்பட்ட முதன்மைக் கடனட்டை மற்றும் வேர்ல்ட் கோபரேட் மாஸ்டர் அட்டையைப் பயன்படுத்தி வெளியேற முன்னர் தமது இரு வழிப் பயணச்சீட்டின் நூறு வீதப் பெறுமதியைச் செலுத்திக் கொள்வனவு செய்து இலங்கையிலிருந்து வெளியேறியதிலிருந்து மீண்டும் நாடு திரும்பும் வரையான காப்புறுதி காலாவதியாகு முன்னரான முதல் 90 நாட்கள்.

**"கொள்கை**" என்பது முன்மொழிவு, அட்டவணைகள், காப்புறுதி ஆவணம், காப்புறுதி செயற்படத் தொடங்கும் திகதியில் அல்லது காப்புறுதி செயற்படும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புறக்குறிப்புகளைக் குறிக்கும்.

**"அட்டவணை**" என்பது இங்கே காப்புறுதிக் கொள்கையின் ஒரு பாகமாக இருக்கும் அட்டவணை கள், ஏதேனும் இணைப்புகள்.

"**கோரிக்கை"** இக்காப்புறுதியின் செயற்பாட்டுப் பகுதியின் கீழ் கோரிக்கை என்பது நிகழ்ந்த அல்லது நிகழக்கூடிய ஒரு சம்பவத்தின் பேரிலான கோரிக்கையாகும். ஒரு குறிப்பிட்ட சம்பவம் அல்லது சூழ்நிலையின் பேரிலான எல்லாக் கோரிக்கைகளும் ஒட்டு மொத்தமாக ஒரு கோரிக்கையாக இக்காப்புறுதியின் கீழ் கருதப்படும். எழுத்து மூலமாக முதலாவது கோரிக்கை முன்வைக்கப்படும்போது செய்யப்பட்டது போன்று தனித்தனியாக கழிவுத்தொகை பிரயோகிக்கப்படும்.

"**மருத்துவச் செலவுகள்"** என்பது காப்புறுதி செய்யப்பட்டவரை பரிசோதனைக்காக அல்லது சிகிச்சைக்குட்படுத்திய மருத்துவரின் எழுத்து மூலமான அபிப்பிராயப் பிரகாரம் நோயிலிருந்து உயிரைக் காப்பாற்றுமுகமாக அல்லது மற்றும் வலியை நிறுத்துவதற்காக அல்லது வேதனையைக் குறைப்பதற்காகக் கோரிக்கை நிர்வாகியால் அனுமதிக்கப்பட்ட அவசியமான மருத்துவச் செலவுகளைக் குறிக்கும் (மருந்துகள், மருத்துவர் கட்டணம், மருத்துவமனைக் கட்டணம், ஆம்புலன்ஸ், மருத்துவ வழிமுறைகள் அல்லது மருத்துவ சேவைகள் அடங்கலாக)

**"மருத்துவ ஆலோசகர்கள்"** என்பது கோரிக்கை நிர்வாகியினால்

நியமிக்கப்பட்ட மருத்துவர்களைக் குறிக்கும்

**"விபத்து மற்றும் எதேச்சையான"** என்பது திடீரென, எதிர்பாராத விதமாக, திட்டமிடப்படாத , வெளிப்படையான நிகழ்வொன்றைக் குறிக்கும்.

"**உடற்காயம்"** என்பது விபத்துக் காரணமாக ஏற்படும் வெளிப்படையான சிராய்ப்புகள், காயங்கள் மற்றும் நீரில் மூழ்கும் சந்தர்ப்பம் அல்லது உட்காயத்தைக் குறிக்கும். இவை தவிர்ந்த வேறு நோய்கள் அல்லது வியாதிகள் உள்ளடக்கப்படவில்லை.

**"முன்னரே காணப்பட்ட நிலைமைகள்"** என்பது காப்புறுதி செயற்படும் திகதிக்கு முன்னதாகத் தோற்றம் பெற்றிருந்த அல்லது தொற்றிய ஒரு நிலைமை தொடர்பான மருத்துவ ஆலோசனை அல்லது மருத்துவப் பராரமரிப்பு, சிகிச்சை.

**"சுகயீனம்"** என்பது காப்புறுதி செய்யப்பட்டவரின் உடல் உறுதியை காப்புறுதிக் காலப்பகுதிக்குள் பாதித்து மருத்துவரின் உடனடி சிகிச்சையை அவசியமாக்கும் நிலைமைகளைக் குறிக்கும்.

**நோய்** என்பது காப்புறுதி காலப்பகுதிக்குள் அடையாளப்படுத்தக்கூடிய வரையறை செய்யக்கூடிய அறிகுறிகளின் அடிப்படையில் உடனடி மருத்துவ சிகிச்சையை அவசியமாக்கும் உடல் உறுப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறிக்கும்.

**"மருத்துவர்"** என்பது உரிய தகுதி மற்றும் அனுமதிப்பத்திரம் ( மருத்துவத்துறையில் நியாயாதிக்கம் உள்ள பொருத்தமான அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள) பெற்று அனுமதிப்பத்திரத்தின் பரப்பெல்லைக்குள் சேவை வழங்கும் மருத்துவரைக் குறிக்கும். ஆனால் அவர் காப்புறுதி செய்யப்பட்டவரின் குடும்ப அங்கத்தவராக இருக்கக் கூடாது.

**"கோரிக்கை நிர்வாகி"** என்பது அலியான்ஸ் இன்சுரன்ஸ் லிமிடட்(இதனகத்துப்பின்னர் கம்பனி என அழைக்கப்படும்) அல்லது கோரிக்கைகளை கவனிக்க கம்பனி நியமிக்கும் அதிகாரி

**"விமானப் பயணப்பொதிகள்"** என்பது காப்புறுதி செய்யப்பட்டவர் நாடுகடந்த பயணத்தின்போது விமான நிறுவனத்திடம் அவரால் கையளிக்கப்பட்டு அதனைப் பொறுப்பேற்றமைக்குச் சான்றாக விமான நிறுவனம் பற்றுச்சீட்டு வழங்கியுள்ள அத்தகைய பயணப்பொதிகளைக் குறிக்கும். அப்பொதிகள் விமானப் பயணத்தில் தடை செய்யப்பட்ட பொருட்களை அல்லது விமான நிறுவனத்தின் கொள்கைகள், விதிகளை மீறுகின்ற அத்தகைய பொருட்களைத் தம்மகத்தே கொண்டிருக்கக்கூடாது.

**"திருட்டு"** என்பது காப்புறுதி செய்யப்பட்டவரின் உடமைகளை அவரிடமிருந்து அபகரிக்கும் நோக்கில் ஏதேனும் நபர் ஒருவரின்

நேர்மையீனமான செயலைக் குறிக்கும்

**“கழிவுத்தொகை”** என்பது இக்காப்புறுதியின் கீழ் ஒவ்வொரு கோரிக்கையின் பேரிலும் காப்புறுதிசெய்யப்பட்டவர் பொறுப்பேற்க வேண்டிய தொகையைக் குறிக்கும். காப்புறுதியின் கீழ் கம்பனிக்குள்ள பொறுப்பு கழிவுத்தொகைக்கு மேற்பட்ட தொகையாக இருக்கும்

**“விமான நிறுவனம் / பொதுப்போக்குவரத்துச் சாதனம்”** என்பது அதன் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட பயணிகள் மற்றும் பொருள்காவி விமானங்களைப் பறக்க விடுவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள விமான நிறுவனத்தைக் குறிக்கும்.

**“சொத்துச்சேதம்”** என்பது மூன்றாம் தரப்புக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களுக்கு ஏற்படும் மெய்யான பௌதீக சேதங்கள்

**“நட்டஈடு”** என்பது காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது அவரது சார்பில் தீர்ப்பு அல்லது நடுத்தீர்ப்பு அல்லது மற்றும் இணக்கப்பாடு காரணமாகப் பணமாகக் கொடுக்க வேண்டிய தொகையைக் குறிக்கும். எனினும், தண்டப்பணம், தண்டம், தண்டனைக்குரிய சேதங்கள், அபரிதமான சேதங்கள், பணமல்லாத நிவாரணங்கள் அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரின் நிதி சார் பொறுப்பற்ற வேறு தொகை அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரால் சட்ட உதவியின்றி மீளப் பெறமுடியாத தொகை அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழ் காப்புறுதி செய்யப்பட முடியாததாகக் கருதப்படக்கூடிய ஏதும் விடயங்கள்.

“**மாசுறுதல்**” என்பது, திண்மம், திரவம்,வாயு அல்லது சூடு, மாசுபடுத்தி,புகை, ஆவி, அமிலம், காரம், கதிர்வீச்சு அல்லது / மற்றும் அணுப்பொருட்கள், இரசாயணப் பதார்தங்கள், கழிவுப்பதார்த்தங்கள் (மீள்சுழற்சிக்கு உட்படக்கூடிய, மறுசீரமைக்கப்பட்ட, மீட்கப்பட்ட பதார்த்தங்கள் உட்பட எனினும் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத)அல்லது வளிமண்டலம், நீர், மண் அல்லது வேறு உறுதியான பொருட்களின் உடைமைகளினால் மாசுறுதல்.

“**நியாயமான மேலதிக செலவுகள்”** என்பது காப்புறுதிக்குற்பட்ட இடர் காரணமாக மேற்கொண்ட உணவு, தங்குமிட வசதி போன்ற விமான நிறுவனத்தினால் அல்லது வேறு எத் தரப்பினராலும் இலவசமாக வழங்கப்படாத அத்தியாவசிய தேவைகளுக்கான செலவு.

“**நியாயமான மற்றும் நடைமுறை மட்டம்**” என்பது

அ) சிகிச்சை பெறும் உள்ளூரில் சமாந்தரமான சிகிச்சைகளுக்கும் சேவைகளுக்கும் அறவிடப்படும் கட்டணத்துக்கு மேற்படாத ; மற்றும்

ஆ) காப்புறுதி இல்லாத நிலையில் செய்யப்படும் வாய்ப்பில்லாத

மருத்துவக் கட்டணங்களைக் குறிக்கும்.

**“உறுதிப்படுத்தப்பட்ட தொகை”** என்பது (செய்யப்படும் கோரிக்கைகளின் எண்ணிக்கை அல்லது கோரிக்கை செய்யும் காப்புறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையுடன் சம்பந்தமில்லாமல்) ஒரு குறித்த கோரிக்கை தொடர்பில் செலுத்தக்கூடிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிக பட்சத்தொகை மற்றும் எல்லா மொத்தக் கோரிக்கையின் பேரில் கம்பனி காப்புறுதி செல்லுபடியாகும் காலப்பகுதிக்குள் மொத்தமாக ஒவ்வொரு காப்புறுதி செய்யப்பட்டவருக்கும் செலுத்தக்கூடிய தொகையைக் குறிக்கும்.

## இ.எல்லாப் பிரிவுகளுக்கும் பொதுவான நிபந்தனைகள்

### கோரிக்கைகள் தொடர்பில் அறியத்தருதல்

இக்காப்புறுதியின் ஏதும் பிரிவின் கீழ் ஒரு கோரிக்கையை எழச்செய்யும் அல்லது எழச் செய்யக்கூடிய ஒரு நிகழ்வு சம்பவித்த கையோடு காப்புறுதி செய்யப்பட்டவர் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

அ) பிரிவு “**அ”** அல்லது மற்றும் “**ஆ”** வின் கீழான கோரிக்கைகளுக்கு, காப்புறுதி செய்யப்பட்டவர் அல்லது அவர் மரணித்திருப்பின் அவரது சட்ட ரீதியான அல்லது வேறு பிரதிநிதி கோரிக்கை நிர்வாகிக்கு அறியத்தர வேண்டும். அத்துடன், மருத்துவரின் பெயர், சிகிச்சையளிக்கப்பட்ட மருத்துவமனையின் பெயர், தொலைபேசி இலக்கம் மருத்துவ உதவியை நாட வேண்டிய அவசியம் மற்றும் அது தொடர்பான ஏனைய ஆவணங்கள் , தகவல்கள் என்பனவும் கோரிக்கை நிர்வாகிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**உள்ளக நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமை சம்பந்தமாக எமது சர்வதேச அவசர உதவித் தொடர்பு மையத்துக்கு(SOS) உடன் அறிவித்தல் தரப்படாதவிடத்து பிரிவு “அ” அல்லது மற்றும் “ஆ” வின் கீழ் எந்தக் கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனினும் ஆயுர்வேத சிகிச்சைகளுக்கு இந்நிபந்தனை பொருந்தாது.**

ஆ) காப்புறுதி செய்யப்பட்டவர் இலங்கை திரும்பிய 14 நாட்களுக்குள் உடனடியாக கோரிக்கை நிர்வாகிக்குத் தெரியப்படுத்தி கோரிக்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஆவணங்கள் சகிதம் கோரிக்கை நிர்வாகியிடம் கையளிக்க வேண்டும்.

இ) கம்பனியின் எழுத்து மூல முன்னனுமதியின்றி காப்புறுதி செய்யப்பட்டவர் எந்த வித பொறுப்பையும் கையேற்கவோ அல்லது கொடுமுனைவுகள் வழங்கவோ அல்லது கொடுப்பனவுகளைச் செய்யவோ

கூடாது.

**போதுமான கவனம்**

காப்புறுதி செய்யப்பட்டவர் இக்காப்புறுதியின் கீழ் கோரிக்கை ஒன்றை எழச்செய்யும் விடயம், காரணி சூழ்நிலைகளிலிருந்து அவரையும் அவரது உடைமைகளையும் பாதுகாப்பதற்குரிய எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மற்றும் இக்காப்புறுதியின் கீழ் கோரிக்கையொன்றைத் தூண்டக்கூடியதாக அமையக் கூடிய எதேனும் காரியத்தை அல்லது செயலைச் செய்யக் கூடாது ( ஒரு மனித உயிரைக் காப்பாற்றும் நடவடிக்கை தவிர்ந்த )

**ஆர்வத்தை கை மாற்றுதல்**

இக்காப்புறுதி, காப்புறுதி செய்யப்பட்டவருக்கும் காப்புறுதி செய்பவருக்கும் இடையே உள்ள ஒரு ஒப்பந்தமாகும். எனவே, காப்புறுதி செய்யப்பட்டவர் எந்த வகையிலும் வேறொரு நபருக்கு, நிறுவனத்துக்கு, அல்லது மருத்துவமனை, கம்பனி, அல்லது சட்ட அந்தஸ்துள்ள அமைப்புக்கு கம்பனியின் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரின் எழுத்து மூல முன் னனுமதியின்றி இதன் நன்மைகளை அல்லது மற்றும் பொறுப்புகளைக் கைமாற்றம் செய்யவோ சாட்டுதல் செய்யவோ, அந்நியப்படுத்தவோ அல்லது கடந்து போகச்செய்யவோ கூடாது. இருப்பினும், காப்புறுதி செய்யப்பட்டவர் நிரந்தர உடல் செயலிழப்புக்கு ஆளாகியிருந்தால் அல்லது மரணமடைந்திருந்தால் அவரது சட்ட ரீதியான வாரிசுகள் அவரது சார்பில் கோரிக்கை சமர்ப்பிக்கலாம்.

**கோரிக்கையை மதிப்பீடு செய்தலும் கொடுப்பனவும்**

அ) இக்காப்புறுதியின் கீழான எந்தக் கொடுப்பனவுக்கும் வட்டி வழங்கப்படமாட்டாது.

ஆ) காப்புறுதி செய்யப்பட்டவர் உரிய ஆவணங்கள் அல்லது / மற்றும் தகவல்களை கோரிக்கை நிர்வாகிக்கு சமர்ப்பித்ததன் பேரில் அவர் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையைக் கம்பனி திருப்திப்படும் வகையில் தீர்மானிக்கும் வரை கோரிக்கை சம்பந்தமான எந்தக் கொடுப்பனவுக்கும் கம்பனி பொறுப்பாளியாக மாட்டாது.

இ) காப்புறுதி செய்யப்பட்டவர் இலங்கை திரும்பிய பின்னர் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளுக்கு இலங்கை ரூபாவிலேயே கொடுப்பனவு செய்யப்படும்.

ஈ) குறிப்பாக பிரிவு "**அ**" அல்லது/மற்றும் "**ஆ**" தொடர்பில்;

(i)கோரிக்கை நிர்வாகியினால் கொடுப்பனவை மேற்கொள்ள முன்னர் அனுமதிக்கப்பட்ட அத்தகைய கட்டணங்கள் மாத்திரமே கம்பனியினால் மீளளிப்புச் செய்யப்படும்.

(ii)கோரிக்கை நிர்வாகியினால் அல்லது/மற்றும் கம்பனியினால் கோரப்படுமிடத்து, (அவரது சொந்தச் செலவில்) காப்புறுதி செய்யப்பட்டவர் கோரிக்கை தொடர்பான சான்றிதழ்கள், தகவல்கள், சான்றுகள் அல்லது ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் . மற்றும் கோரிக்கை நிர்வாகி அல்லது / மற்றும் கம்பனி, காப்புறுதி செய்யப்பட்டவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியம் எனக் கருதுமிடத்து அதற்கு உடன்படவும் காப்புறுதி செய்யப்பட்டவருக்குச் சிகிச்சை வழங்கிய மருத்துவ ஆலோசகர் எவரையும் கோரிக்கை சம்பந்தமான தவல்கள் அல்லது மற்றும் ஆவணங்கள் குறித்து விளக்கம் கோருவதன் பேரில் தொடர்பு கொள்வதற்கும் இணக்கம் தெரிவிக்கிறார்.

(iii) காப்புறுதி செய்யப்பட்டவர் இயற்கை எய்துமிடத்து அதன் செலவில் ஒரு பிரேத பரிசோதனையை மேற்கொள்வதற்கு கம்பனிக்கு உரிமை உண்டு.

(iv) காப்புறுதி செய்யப்பட்டவர் பூரண உடல் செயலிழப்புக்கு ஆளாகியுள்ள நிலையில் அல்லது வேறு வகையில் கோரிக்கையின் பேரில் செல்லுபடியாகும் ஒரு பற்றுச்சீட்டை வழங்க இயலாத நிலையில் கம்பனி அவரது சட்ட ரீதியான பாதுகாவலர் அல்லது பிரதிநிதியிடம் கொடுப்பனவை வழங்கலாம். நம்பிக்கை அடிப்படையில் செய்யப்படும் அத்தகைய கொடுப்பனவு கம்பனியைக் கோரிக்கை தொடர்பிலான அதன் பொறுப்பிலிருந்து முழுமையாக விடுவிப்பதற்குப் போதுமானதாக அமையும்.

(v) நடைமுறையில் உள்ள மற்றும் வழமையான மட்டத்தில் உள்ள மருத்துவக் கட்டணங்கள் தவிர்ந்த கட்டணங்களை கம்பனி செலுத்த மாட்டாது.

## நடுத்தீர்ப்பு

இக்காப்புறுதியின் கீழ் ஏதேனும் கோரிக்கை தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை குறித்து ஏதும் பிணக்கு அல்லது கருத்து வேறுபாடு தோன்றுமிடத்து (பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில்) ஏனைய விடயங்களைத் தவிர்த்து தனியாக அத்தகைய முரண்பாடு அல்லது கருத்து வேறுபாடு மாத்திரம் 1995 ம் ஆண்டின் 11 ம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்தின் கீழ் நடுத்தீர்ப்புக்காக ஒரு தனி நடுத்தீர்ப்பாளரிடம் முன்வைக்கப்படலாம் அல்லது தரப்பினர்கள் 30 நாட்களுக்குள் நடுத்தீர்ப்பை நாடும் தரப்பினது தனி நடுத்தீர்ப்பாளரை நியமனம் செய்ய இணங்காத விடத்து, மூவர் கொண்ட நடுத்தீர்ப்பாளர் குழுவிடம் ( மூன்று நடுத்தீர்ப்பாளர்கள், பிணக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆளுக்கு ஒருவர் வீதமும், அவ்விரண்டு நடுத்தீர்ப்பாளர்கள் சேர்ந்து மேலும் ஒருவரையும் நியமிக்க வேண்டும்) பிணக்கு முன்வைக்கப்படும்.

நடுத்தீர்ப்பு கொழும்பில் ஆங்கில மொழியில் மாத்திரம் இடம் பெறும்.

**மோசடி** என்பது தொகை மற்றும் ஏனைய அம்சங்கள் தொடர்பில் தவறானது அல்லது வஞ்சகமானது என மனப்பூர்வமாக அறிந்து கொண்டு காப்புறுதி செய்யப்பட்டவர் கோரிக்கையை மேற்கொள்ளுமிடத்து காப்புறுதி செய்யப்பட்டவரின் பேரில் உள்ள காப்புறுதிப்பத்திரம் செல்லுபடியற்றதாக ஆவதுடன் கோரிக்கைகள் மற்றும் கொடுப்பனவுகள் மறுக்கப்படும்.

**ரத்துச்செய்தல்**

இக்காப்புறுதியை காப்புறுதி செய்யப்பட்டவருக்கு முப்பது நாட்கள் எழுத்து மூல முன்னறிவித்தல் வழங்குவதன் ஊடாக கம்பனி ரத்துச்செய்யலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் காப்புறுதி செய்யப்பட்டவர் கோருமிடத்து காப்பீட்டுக்கு செலுத்திய சந்தாப்பணத்தின் மீதி உள்ள காலப்பகுதிக்கான விகிதாசார அடிப்படையிலான தொகை மீளளிப்பு செய்யப்படும். காப்புறுதி செய்யப்பட்டவர் கம்பனிக்கு முப்பது நாட்கள் எழுத்து மூல முன்னறிவித்தல் வழங்குவதன் ஊடாக இக்காப்புறுதியை ரத்துச்செய்யலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் காப்புறுதி செய்யப்பட்டவர் கோருமிடத்து காப்பீட்டுக்கு செலுத்திய சந்தாப்பணத்தின் மீதி உள்ள காலப்பகுதிக்கான விகிதாசார அடிப்படையிலான தொகை மீளளிப்பு செய்யப்படும்.

**அறிவித்தல் மற்றும் வெளிப்படுத்தல்**

கம்பனியின் அவதானத்துக்காகச் செய்யப்படும் சகல அறிவித்தல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் எழுத்து மூலமே சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**மாற்றாடும் உரிமை**

இக்காப்புறுதியின் நட்ட உத்தரவாதம் வழங்க முன்னர் அல்லது பின்னர் கம்பனியின் ஆர்வம் அல்லது உரிமையை அல்லது நிவாரணத்தைப் பெற அல்லது கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்துக்கு பிறரிடமிருந்து நிவாரணம் அல்லது நட்ட உத்தரவாதம் பெறவேண்டி கம்பனி தமது சொந்த செலவில் எடுக்கும் அவசியமான எல்லா நடவடிக்கைகளுக்கும் காப்புறுதி செய்யப்பட்டவர் அல்லது கோரிக்கையாளர் அனுமதியும் ஒத்துழைப்பும் நல்கவேண்டும்.

**ஆளுகைச் சட்டம்**

இக்காப்புறுதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளின் நிர்மாணம், உரைபெயர்ப்பு மற்றும் பொருள் என்பன இலங்கைச்சட்டங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். பிரிவுத்தலைப்புகள் ஒரு விளக்கத்துக்காக கொடுக்கப்பட்டுள்ளனவே தவிர காப்புறுதியின் ஏற்பாடுகளின் நிர்மாணம்

அல்லது உரைபெயர்ப்பு ஆகிய நோக்கங்களுக்காக காப்புறுதியின் ஒரு பாகமாக ஆக மாட்டாது. இக்காப்புறுதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் கம்பனியால் வழங்கப்படும் புறக்குறிப்பினூடாக அல்லாது நீக்கப்படவோ அல்லது திருத்தப்படவோ முடியாது.

**முழுமையான ஒப்பந்தம்**

இக்காப்புறுதிப்பத்திரம் ஒரு முழுமையான காப்புறுதி ஒப்பந்தத்தை உள்ளடக்கியதாகும் எனவே கம்பனியின் எழுத்து மூல அனுமதியின்றி பத்திரத்தில் செய்யப்படும் எந்தவித மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ செல்லுபடியாக மாட்டாது. கம்பனியின் அனுமதி காப்புறுதிப்பத்திரத்தின் மீது ஒரு புறக்குறிப்பின் ஊடாக உறுதி செய்யப்படவேண்டும். மேலும், எந்த ஒரு முகவருக்கும் இந்தப் பத்திரத்தின் எந்த அம்சத்திலும் மாற்றம் செய்வதற்கோ அல்லது அதன் ஏற்பாடுகளை நீக்கவோ அதிகாரம் கிடையாது.

**உரிய பின்பற்றுதல்கள்**

இக்காப்புறுதியின் விதிகள், ஏற்பாடுகள், நிபந்தனைகள் மற்றும் உத்தரவாதங்கள் காப்புறுதிசெய்யப்பட்டவர் தொடர்பு பட்டுள்ள அளவு வரை அவற்றைப் பின்பற்றி நடக்கவேண்டியது கம்பனி இக்காப்புறுதியின் கீழ் ஏதும் பொறுப்பை ஏற்பதற்ககான முன்னுறு நிபந்தனையாகும்.

**பங்களிப்பு**

இக்காப்புறுதியில் அடங்கியுள்ள ஏதேனும் சேதம் அல்லது இழப்பு நிகழும் சந்தர்ப்பத்தில் காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது வேறு ஏதும் ஆளினால் அச்சேதம் அல்லது இழப்புகளின் பேரில் செய்யப்பட்ட காப்புறுதி ஏதும் அமுலில் இருந்தால் அவற்றுக்கிடையேயான மதிப்பீட்டு விகிதாசார அடிப்படையிலான தொகையை விட மேலதிகமான தொகையைச் செலுத்தும் பொறுப்பு கம்பனிக்கு கிடையாது.

## எல்லாப் பிரிவுகளுக்கும் பொதுவான விலக்கல்கள்

பின்வரும் காரணிகளினால் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்பட்ட அல்லது அடிப்படையாக அமைந்த அல்லது தோற்றம் பெறுகின்ற அல்லது தொடர்புபடுத்தக்கூடிய கோரிக்கைகளுக்குக் கொடுப்பனவு வழங்க வேண்டிய பொறுப்பு கம்பனிக்குக் கிடையாது;

- காப்புறுதி செய்யப்பட்டவர் ஏதேனும் கடற்படை, இராணுவ அல்லது விமானப்படை நடவடிக்கைகளில் பங்கு பெறல். அது ஒரு இராணுவ அல்லது போர்ப் பயிற்சியாக அல்லது உள்நாட்டு / வெளிநாட்டு எதிரியுடனான படை நடவடிக்கையாக இருக்கலாம்.

- போர், படையெடுப்பு, வெளிநாட்டுப் பகைவனின் நடவடிக்கை, விரோதச் செயல்கள் (போர்ப் பிரகடனம் செய்யப்பட்டாலும் படாவிட்டாலும்) உள்நாட்டு யுத்தம், உள்நாட்டுக் கொந்தளிப்பு, கிளர்ச்சி, புரட்சி, கலவரம், இராணுவம் ஆட்சியைக் கவிழ்த்தல் அல்லது அரசினால் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை ஒன்றின் தேவைக்காக சொத்துப்பறிமுதல், நிர்மூலமாக்கப்படல், சேதப்படுத்தப்படல், தேசியமயமாக்கப்படுதல்.
- ஏதேனும் அணு எரிபொருள் அல்லது அணுக்கழிவுகளினால் அல்லது அணு எரிபொருள் தகனமடைவதனால் ஏற்படும் கதிர் வீச்சுத் தாக்கத்தினால் ஏற்படும் மாசு அல்லது அயனாக்கும் கதிர்ப்பு அல்லது அணு உலை நிலைகளின் அல்லது வினையுலைகளின் அல்லது அணு அவை அல்லது அவற்றின் கூறுகளின் கதிரியக்கத் தொழிற்பாடு, நச்சுப்பொருள், வெடிபொருள் அல்லது அபாயகரமான அல்லது மாசடையச் செய்யும் உடைமைகள் காரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏதேனும் சொத்துக்கு ஏற்படும் அல்லது பங்களிப்பு செய்யப்படும் அல்லது தோன்றும் எந்த விதமானதுமான இழப்புகள் அல்லது செலவுகள்.
- அஸ்பெஸ்டஸ் (கல்நார்) அல்லது அது சார்ந்த பொருள்களின் உற்பத்தி செயற்பாடுகள், உற்பத்தி, கையாளுதல், விற்பனை, விநியோகம், களஞ்சியப் படுத்தல் அல்லது பாவனையுடன் தொடர்புள்ள "**அஸ்பெஸ்டோசிஸ்**" நோய் அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு நோய்கள் அல்லது வியாதிகள்.
- காப்புறுதி செய்யப்பட்டவரின் சட்ட விரோத அல்லது குற்றவியல் செயற்பாடுகள் அல்லது அவற்றில் ஈடுபட முனைதல்.
- ஏதேனும் வகையான பின்விளைவுகள்.
- இலங்கைக்குடியரசு ஏற்கனவே பயணத்தடை அல்லது விசேட பயணத்தடை விதித்துள்ள சீனா, ஹாங்காங், மகோ (Macau) & தாய்வான் ஆகிய பிரதேசங்களுக்கு அல்லது விமானப் பயணச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நாடுகளுக்குப் பயணம் செய்தல் அல்லது பயணம் மேற்கொள்ள முன்னர் இலங்கைக் குடியரசின் பிரஜைகள் உள்நுழைவதற்கு தடை விதித்துள்ள நாடுகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டவர் மேற்கொள்ளும் பயணம்.

- ஒரு பயணியாக இல்லாமல் காப்புறுதி செய்யப்பட்டவர் விமானத்தில் பயணம் செய்தல். இந்த விலக்கலின் நோக்கங்களுக்காக விமானப்பயணம் என்பது விமானம் ஒன்றில் பயணம் செய்யும்

நோக்குடன் ஏறி அமர்ந்து பயணம் முடிந்து விமானத்திலிருந்து இறங்குதல் எனப் பொருள்படும்.

**பின்வருவது காப்புறுதியின் நன்மைகளில் அடங்காத உதவி**

இது அலியான்ஸ் குளோபல் அசிஸ்டன்ஸ் சேவை நிலையத்தினால் வழங்கப்படும் ஒரு உதவியாகும். இதன் விதிகள், நிபந்தனைகள் பின்வருமாறு:

**அவசரகால பண முற்பண உதவி**

இது காப்புறுதி செய்யப்பட்டவருக்கு திருட்டு, பயணப்பொதி அல்லது பணம் திருடப்படல், அல்லது பயணத்தடை போன்ற அவசர கால நிலைமைகளில் பணம் தேவைப்படும் போது பெறக்கூடிய ஒரு உதவிச்சேவையாகும். கம்பனி காப்புறுதி செய்யப்பட்டவரின் உறவினர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதன் ஊடாக இந்த உதவி தேவைப்படும் நபருக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வரையறைக்குட்பட்டு அவரது தேவைக்கேற்ப பணம் வழங்கும்.

அவசர உதவிக்கான தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் காப்புறுதி செய்யப்பட்டவர் அலியான்ஸ் சர்வதேச உதவியை ( அலியான்ஸ் குளோபல் அசிஸ்டன்ஸ்- AGA) தொலைபேசி இலக்கம் : **0091 12 443 43955** ஊ டாக அழைக்க முடியும்.

அலியான்ஸ் குளோபல் அசிஸ்டன்ஸ் (AGA ) காப்புறுதி செய்யப்பட்டவரின் விபரங்களைப் பரிசீலனை செய்து தேவையான பணத்தொகை, விநியோகச் செலவு உட்பட வழங்கப்படும் பணத்துக்கான கடனட்டை உத்தரவாதம் வழங்குகின்ற இலங்கையில் தொடர்பு கொள்ள வேண்டிய அனுசரணையாளரை அல்லது நெருங்கிய உறவினரை முடிவு செய்யும்.

அலியான்ஸ் குளோபல் அசிஸ்டன்ஸ் காப்புறுதி செய்யப்பட்டவரிடமிருந்து அல்லது அவரது நெருங்கிய உறவினரிடமிருந்து பணத்துக்கான உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவசர உதவி மத்திய நிலையம் பண விநியோகத்துக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

**இணைப்பு –II**

**பலாபலன்களுக்கு த் தகுதி பெறல்**

காப்புறுதி செய்யப்பட்டவரால் கோரிக்கை தொடர்பான விதிமுறைகளுக்கு அமைவாக கோரிக்கை விண்ணப்பம் இலங்கை திரும்பி முப்பது நாட்களுக்குள் (30) செய்யப்படவேண்டும். இருப்பினும் உரிய நேரத்தில் ஆதார ஆவணங்கள் இல்லாதவிடத்து கோரிக்கைத் திணைக்களத்தின் முன்னனுமதியுடன் இக்கால எல்லை மேலும் நீடிக்கப்படலாம். செலவுகளுக்கான ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். புகைப்படப்பிரதிகள் ஏற்கப்பட மாட்டா. பயணப்பலாபலன்கள் தொடர்பான அனைத்துக் கோரிக்கைகளும் இலக்கம் : 675, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்த , கொழும்பு-09, இலங்கை எனும் முகவரியில் அமைந்துள்ள "அலியான்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட்டிடம்" கையளிக்கப்பட வேண்டும். எச்.எஸ்பீ.சி. முதன்மை அட்டை/துணை அட்டைக்குரிய காப்புறுதிக்கான கொள்கை இலக்கம் TPS 44741

**கோரிக்கையை ஏற்பதற்கு தேவையான ஆவணங்கள்**

தேவையான கோரிக்கைப்படிவங்களை அலியான்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட்டிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அல்லது ஈமெயில் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.(travel@allianz.lk)

1.உரிமை கோரப்படும் கோரிக்கைகள் இலங்கை திரும்பி முப்பது நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

2.அவசியமான ஆவணங்கள் மற்றும் ஒவ்வொரு வகையான கோரிக்கைகளுக்குமான நடைமுறைகள்(அனைத்துக் கோரிக்கைகளுக்கும் எச்.எஸ்.பீ.சி கடனட்டையூடாக பயணச்சீட்டுக் கொள்வனவு செய்தமைக்கான ஆதாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

**கோரிக்கையின் வகைகள்**

**விபத்து மரணம்**

**தேவையான ஆவணங்கள்**

காப்புறுதி செய்யப்பட்டவரின் பயனாளி பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்
- பிறப்புச்சான்றிதழ்
- இறப்புச்சான்றிதழ்
- பிரேத பரிசோதனை அறிக்கை
- கிடைக்கப்பெற்ற கோரிக்கை சம்பந்தமாக அறியத்தரப்படுவதோடு மேலதிக ஆவணங்கள்/தகவல்கள் தேவையாயின் அலியான்ஸ் கோரிக்கைப் பிரிவினால் அறியத்தரப்படும்.

**நடைமுறைகள்**

பயணிகள் விமானத்தில் இருக்கும்போது மரணம் அல்லது அவயவங்கள் துண்டாடப்படுதல் சம்பவித்தால் இழப்புடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும், விமான நிறுவனத்துடன் நிகழ்ந்த தொடர்பாடல்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**விபத்துக் காரணமாக அவயவம் துண்டாடப்படுதல்**

**தேவையான ஆவணங்கள்**

அவசர விபத்துக் கோரிக்கையை ஒத்தது

**நடைமுறைகள்**

அவசர விபத்துக் கோரிக்கையை ஒத்தது

வெளிநாட்டு அவசர விபத்து மற்றும் சிகிச்சை செலவுகள் (பலாபலன்கள் அட்டவணையின் படி மிகைத்தொகை)

**தேவையான ஆவணங்கள்**

காப்புறுதி செய்யப்பட்ட பயனாளி பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க

வேண்டும்

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்
- வைத்தியரின் அறிக்கை
- அனுமதி / வெளியேறல் அட்டையின் மூலப்பிரதி
- பற்றுச்சீட்டுகள், மருந்துச்சீட்டுகளின் மூலப்பிரதி
- எக்ஸ்ரே அறிக்கை / பரிசோதனை அறிக்கை/ நோய்குறித்த அறிக்கை ஆகியவற்றின் மூலப்பிரதிகள்
- கடவுச்சீட்டு / விசாவுடன் கூடிய வெளிச்செல்லும், உள்நுழையும் முத்திரைகள் என்பவற்றின் பிரதிகள்

**நடைமுறைகள்**

வைத்தியசாலை அனுமதியாயின் தயவு செய்து 00911244343955 இலக்கத்தைத் தொடர்பு கொள்க. மருத்துவ அறிக்கைகள் , பில்கள்,விலைச்சிட்டைகள், பற்றுச்சீட்டுகள் என்பவற்றை பத்திரமாக வைத்திருக்கவும்.

**பயணப்பைகள் தொலைதல்**

**தேவையான ஆவணங்கள்**

- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்
- கடவுச்சீட்டு / விசாவுடன் கூடிய வெளிச்செல்லும், உள்நுழையும் முத்திரைகள் என்பவற்றின் பிரதிகள்
- பயணப்பைச் சுட்டியின் பிரதிகள்
- பயணப்பை தொலைந்தமை குறித்து விமான நிறுவனம்/ அதிகாரிகள்/ ஏனையோருடன் நடத்திய தொடர்பாடல்களின் பிரதிகள்
- உடைமை முரண்பாட்டு அறிக்கை (விமான நிறுவன அதிகார சபை / விமான நிறுவனத்திலிருந்து பெறப்பட்டது)
- விமான நிறுவனத்திடமிருந்து / வேறு அதிகார சபைகளிலிருந்து பெற்ற நட்டஈடு பற்றிய விபரங்கள், ஏதுமிருப்பின்
- தாமதம் காரணமாக ஏற்பட்ட மேலதிக செலவுகளுக்கான பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகள்

- பயணப்பையில் காணப்பட்ட பொருட்களின் முழுமையான பட்டியல்
- விமானத்தில் ஏறுவதற்குரிய அனுமதிச் சீட்டு (போர்டிங் பாஸ்)

**நடைமுறைகள்**

இழப்புக் குறித்து விமான நிறுவனத்துக்கு தெரியப்படுத்தி முறைப்பாடு செய்ய வேண்டும். முறைப்பாடு மற்றும் அதற்குக் கிடைத்த பதில் குறித்த அனைத்துப் பதிவுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பயணப்பை தாமதம் மற்றும் / அல்லது விமானப் பயணம் தாமதம்(பலாபலன்கள் அட்டவணைப்படி)

**தேவையான ஆவணங்கள்**

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்
- தாமதம் காரணமாகக் கொள்வனவு செய்த பொருட்கள் மற்றும் செலவுகளுக்கான பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகள்
- பயணச்சீட்டு மற்றும் இருக்கைச்சீட்டின்(போர்டிங் பாஸ்) பிரதிகள்
- பயணப்பை தாமதம் குறித்து விமான நிறுவனம்/அதிகாரிகள்/ஏனையோருடன் நடத்திய தொடர்பாடல்களின் பிரதிகள்
- கடவுச்சீட்டின் பிரதி

**நடைமுறைகள்**

விமான நிறுவனத்திடமிருந்து தாமதம் மற்றும் தாமதத்துக்கான காரணம் குறித்த எழுத்து மூல விளக்கத்தைப் பெறவேண்டும். அட்டவணைப்படுத்திய நேரத்திலிருந்து தாமதமான மணித்தியாலங்கள் குறித்த பதிவைத் தம் வசம் வைத்திருக்க வேண்டும். தாமதம் காரணமாக ஏற்பட்ட மேலதிக செலவுகளுக்கான (குறிப்பாக உணவு,தங்குமிடம்) பற்றுச்சீட்டுக்களை பத்திரமாக வைத்திருக்கவும்,

**பயணம் ரத்தாதல்**

**தேவையான ஆவணங்கள்**

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்
- பயணச்சீட்டு மற்றும் மீளப்பெற முடியாத முற்கொடுப்பனவு கட்டணங்களுக்கான பற்றுச்சீட்டுகளின் மூலப்பிரதிகள்
- குடும்ப உறுப்பினரின் மரணமாயின் அவரது மரணச்சான்றிதழ்.
- திருட்டு அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரின் வீடு, வியாபர ஸ்தலத்தின் மீது தாக்குதல் முயற்சியாயின் போலீஸ் அறிக்கை
- கிடைக்கப்பெற்ற கோரிக்கை சம்பந்தமாக அறியத்தரப்படுவதோடு மேலதிக ஆவணங்கள் தேவையாயின் அலியான்ஸ் கோரிக்கைப்பிரிவினால் அறியத்தரப்படும்
- சுகயீனம் அல்லது காயமாயின் மருத்துவரின் எழுத்து மூல சான்று
- கடவுச்சீட்டின் பிரதி

**தனிப்பட்ட பொறுப்பு**

**தேவையான ஆவணங்கள்**

- பொறுப்புக் குறித்த எழுத்து மூல முழுமையான கூற்று
- சாட்சிகளின் கூற்று
- அழைப்புக்கடிதம் , சட்ட அறிவிப்புகள் உட்பட சம்பவம் குறித்த வேறு ஆவணங்கள்
- சம்பவம் குறித்த வேறு தகவல்கள்
- கிடைக்கப்பெற்ற கோரிக்கை சம்பந்தமாக அறியத்தரப்படுவதோடு மேலதிக ஆவணங்கள் தேவையாயின் அலியான்ஸ் கோரிக்கைப்பிரிவினால் அறியத்தரப்படும்

**நடைமுறைகள்**

நட்டஈடு அல்லது வேறு பலாபலன் குறித்து உடன்படவோ அல்லது ஒப்பந்தம் செய்யவோ வேண்டாம். அனைத்து ஆவணங்களையும் அலியான்ஸ் கோரிக்கைப் பிரிவிடம் கையளிக்கவும்.

**கடவுச்சீட்டு தொலைதல்**

**தேவையான ஆவணங்கள்**

- வெளிச்செல்வதற்கான முத்திரையுடன் கூடிய புதிய கடவுச்சீட்டின் பிரதி
- கடவுச்சீட்டுப்பெறுவதற்காக மேற்கொண்ட செலவுகளுக்குரிய பற்றுச்சீட்டுக்கள்
- போலீஸ் அறிக்கையின் பிரதி

**சட்ட செலவுகள்**

**தேவையான ஆவணங்கள்**

- விலைப்பட்டியல்கள் சகிதம் கொடுப்பனவு செய்ய வேண்டிய சட்டச் செலவு பற்றிய எழுத்து மூலமான தவல்கள்.
- கிடைக்கப்பெற்ற கோரிக்கை சம்பந்தமாக அறியத்தரப்படுவதோடு மேலதிக ஆவணங்கள் தேவையாயின் அலியான்ஸ் கோரிக்கைப் பிரிவினால் அறியத்தரப்படும்

**நடைமுறைகள்**

முறையாக கையொப்பமிடப்பட்ட கோரிக்கைப்படிவம் பின்வரும் முகவரியில் இயங்கும் கம்பனியின் முகவரியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அலியான்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட்**

**இல**:675, **டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்த**

**கொழும்பு -**09

தொ.பேசி:+94 11 2303300

ஈ மெயில் : info@allianz.lk

**நடைமுறைகள்**

அனைத்து ஆவணங்களையும் கம்பனிக்கு சமர்ப்பிக்கவும்

குறிப்பு: மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் நடைமுறைகள் ஒரு வழிகாட்டுதல்

மட்டுமே . எலையன்ஸ் நிறுவனம் பொருத்தமான மேலதிக ஆவணங்களை /தகவல்களை கோரலாம். இழப்புகளை /சேதத்தினை /விபத்தைக் குறைக்க அல்லது தவிர்க்க தம்மால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் / முன்னெச்சரிக்கையையும் / எடுக்கவேண்டியது காப்புறுதி செய்யப்பட்டவரின் பொறுப்பாகும்.

பற்றுச்சீட்டு வழங்காத ஏதேனும் மருத்துவமனையில் சிகிச்சை/சேவைகள் பெறப்பட்டால் அங்கிருந்து வெளியேற முன்னர் அது குறித்து அலியான்ஸ் குளோபல் அசிஸ்டன்ஸுக்கு அறியத்தரவும்.
இக்காப்புறுதிக் கொள்கையின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்

## பலாபலன்களின் அட்டவணை – பயணக் காப்புறுதி

## (தனிப்பயணத்திட்டம் )

## அலியான்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட்

| பிரிவு | நன்மைகள் | முதன்மை அ<br>மற்றும் உலக கூட்டிணைந்த<br>மாஸ்டர் அட்டை<br>வரையறை (அமெரி |
|---|---|---|
| அ | அவசர விபத்து மற்றும் மருத்துவச் செலவுகள், வெளியேற்றுதல், திருப்பியனுப்புதல் (முன்னரே உள்ள நிலை அல்லாத)<br>விபத்து அல்லது நோய் காரணமாக மருத்துவசாலை அனுமதி,மருத்துவ வெளியேற்றம், தேவை ஏற்படின் நாட்டுக்கு திருப்பியனுப்புதலுக்கான மருத்துவ செலவுகள் . முதல் ஐம்பது டொலர் ஒவ்வொரு கோரிக்கையின் பேரிலும் கழிக்கப்படுவதுடன் பயணியே / வாடிக்கையாளர் அதனை செலுத்த வேண்டும் | 75,000 |
| ஆ | விபத்து மரணம் அல்லது அவயவங்கள் துண்டிப்புஇழப்பு அட்டவணையின் பிரகாரம் மரணம் அல்லது அவயவங்கள் துண்டிப்புக்கான தொகை | 250,000 |
| இ | விபத்து மரணம் அல்லது அவயவங்கள் துண்டிப்பு(பொது விமானம்)<br>B யில் உள்ளது போன்று, விபத்து பொது விமானமொன்றில் நிகழுமிடத்து மட்டும் | 500,000 |
| ஈ | பொது விமானப் பயணப்பொதிகள் தொலைதல் (25% பொதிக்கு 5% பொருளுக்கு)<br>பொறுப்பேற்கப்பட்ட பயணப்பொதியின் நிரந்தர இழப்புக்கெதிராக காப்புறுதி செய்யப்பட்டவருக்கு இழப்பீடு வழங்குதல் | 2000 |

| | | |
|---|---|---|
| உ | பயணப்பொதிகள் தாமதம் | 500 |
| ஊ | கடவுச்சீட்டுத் தொலைதல்<br>கடவுச்சீட்டுப் பிரதியொன்றினை பெறுவதற்காக அல்லது பயண ஆவணம் ஒன்று பெருவதற்காக ஏற்பட்ட நியாயமான செலவு | 750 |
| எ | தனிப்பட்ட பொறுப்பு | 50000 |
| ஏ | சட்ட உதவி கட்டணங்கள் | 25000 |
| ஐ | கடத்தல் | 1000 |
| ஒ | பயணத்தாமதம் / இடையூறு | பொருத்தமில்லை |
| ஓ | பயணம் இரத்து செய்யப்படல் | 50 |
| | 24 மணிநேர மருத்துவ உதவிச்சேவைகள்<br>-பயணத்துக்கு முந்திய தகவல் சேவைகள்<br>-தூதரகத் தொடர்புகள்<br>-வானிலை மற்றும் நாணய மாற்று வீதம் தொடர்பான தகவல் உதவிகள்<br>-அவசரகாலத் தகவல் பரிமாற்ற உதவி<br>-அவசரகால நிலையின் போது உள்ளூர் விடுதி வசதி<br>-உரை பெயர்ப்பாளரை தொடர்பு படுத்தல்<br>-பயணப்பொதிக்கான உதவி<br>- தொலைந்த கடவுச் சீட்டுக்கான உதவி | உள்ளடக்கப்பட்டுள்ளது |